# உதயன்

சுடர் : 36 | கதிர் : 204 | வெள்ளிக்கிழமை | ஆனி 04 ஆம் நாள் 18 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


# தமிழர்கள் தாயகத்தை உறுதிசெய்ய வேண்டும்

## இந்தியத் தூதுவர் பாக்லேக்கு கூட்டமைப்பின் தலைவர் அழுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழர்களின் தாயகமாக உறுதிசெய்வதற்கு இந்தியா செயற்படுவதுடன் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு நியாய மானதும் கௌரவமானதுமான தீர்வை யும் பெற்றுத்தர வேண்டும். 19 ▶

## சீனாவை கையாள்வது எப்படி எனத் தெரியும்!

*கூட்டமைப்பினருக்கு பாக்லே பதில்*

யாழ்ப்பாணம், ஜூன் 18

இலங்கையில் அதிகரிக்கும் சீனாவின் ஆதிக்கம் தொடர்பிலும், யாழ்ப் பாணம் கீரிமலையில் அமைந்துள்ள மாளிகை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கப்படுவது தொடர்பாகவும் தமிழ்த் 19 ▶



## நடைமுறை சாத்திய வகையில் பேசுவோம்

*கூட்டமைப்பிடம் கூறினார் இந்தியத் தூதுவர்*

யாழ்ப்பாணம், ஜூன் 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன், அரசியல் தீர்வு தொடர்பான விடயங்கள் தொடர்பில் பேசும்போது, தற்போதைய சூழலில் என்ன நடைமுறைச் சாத்திய 19 ▶

## பயணக் கட்டுப்பாட்டைச் சாதகமாக்கி இராணுவத்தால் காணிகள் கபளீகரம்

*மன்னாரிலும் தொடர்கிறது அடாவடி*

மன்னார், ஜூன் 18

மன்னார் பெரியமடு, சன்னார் மற்றும் ஈச்சளவக்கை ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் காணிகள் இராணுவத்தால் கபளீகரம் செய்யப்படுகின் றன என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டி 19 ▶

## பஸில் நாடு திரும்பியதும் கோத்தாபயவுடன் பேச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 18

அமெரிக்காவுக்குச் சென்றுள்ள பஸில் ராஜ பக்ச நாட்டுக்கு மீண்டும் திரும்பியதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதி பதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையி லான பேச்சு நடைபெறும் என்று இந்தியத் தூதுவர் முன்பாகத் 19 ▶

## பயணக் கட்டுப்பாட்டை நீடிப்பதா? இல்லையா?

*இன்று முடிவு என்கிறார் இராணுவத் தளபதி*



கொழும்பு, ஜூன் 18

இலங்கை முழுவதும் தற்போது நடைமுறை யில் உள்ள பயணக் கட்டுப்பாட்டை எதிர்வரும் 21ஆம் திகதி தளர்த்துவதா? இல் லையா? என்பது குறித்து ஜனாதி 18 ▶

## கொரோனாத் தொற்று யாழ்ப்பாணத்தில் 64 வடமாகாணத்தில் 85

*10 நாள் மற்றும் 10 மாத குழந்தைகளும் உள்ளடக்கம்*

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கில் 1,027 பேருக்கு மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனை யில் 85 பேருக்குத் தொற்று 19 ▶

## வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களுக்கும் இந்த மாத இறுதிப் பகுதியில் தடுப்பூசி!

*ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய 4 மாவட்டங்களுக்கும் இம் மாத இறுதியில் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படலாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். 18 ▶

## இரண்டு வாரங்களின் பின் மீள்கிறது நல்லூர் அரசடி

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம் நல்லூர் அரசடிப் பகுதி தனிமைப்படுத்தல் சட்டத் தின் கீழ் கடந்த 28 ஆம் திகதி முதல் 17 ▶

## கொரோனாவால் யாழில் ஒருவர் நேற்று இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 18

கொரோனாத் தொற்றால் பாதிக் கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த 67 வயதுடைய பெண் ஒருவர் நேற்று உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் 19 ▶

## தவறி வீழ்ந்து உயிரிழந்த தொழிலாளிக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூன் 18

கட்டட வேலையில் ஈடுபட்ட போது, மேல் தளத்திலிருந்து தவறி வீழ்ந்த தொழி லாளி உயிரிழந்த 18 ▶



பேராபத்துடைய வைரஸான

## டெல்டா திரிபு இலங்கைக்குள்!

*சமூகத்தொற்று நிலையில் கொழும்பில் அடையாளம்*

கொழும்பு, ஜூன் 18

பெரும் ஆபத்தும், அதிக வீரியமும் கொண்ட 'டெல்டா' வகை வைரஸ் இலங் கையில் கொழும்பு மாவட்டத்தில் சமூகத் தொற்றாக அவதானிக்கப்பட்டுள்ளது என்று சிறிஜயவர்தனபுர பல்க லைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு 18 ▶


உதயன்

செய்திகளுக்கு
021 493 0000
077 1209994

விளம்பரங்களுக்கு
021 493 1111
071 6182182


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்களை கடலில் போடும் திட்டத்தை தொடரவேண்டும்

## கடற்றொழிலாளர் சம்மேளனம் தெரிவிப்பு இந்திய போராட்டத்துக்கு கடும் கண்டனம்

**யாழ்ப்பாணம், ஜூன் 18**

**"கடலில் பஸ்களை போடுவதற்கான ஏற்பாடு இன்னும் தொடர வேண்டும். நேற்றைய இந்திய மீனவர்களின் போராட்டத்தை வன்மையாகக் கண்டிக் கின்றேன்" என்று யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.**

நேற்று அவர் நடத்திய ஊடக சந் திப்பில் மேலும் தெரிவிக்கையில்:

இந்திய மீனவர்கள் இலங்கை அர சுக்கு எதிராக வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற பஸ் களை கடலுக்குள் போடும் திட் டத்தை எதிர்த்து நேற்றுப் போராட் டத்தில் ஈடுபட்டனர். வடக்கு மீனவர் கள் சார்பிலும் யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் சார்பிலும் குறிப்பிட்ட சில இந்திய மீனவர்க ளின் போராட்டத்தை நாம் வன் மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கை அரசும் கடற்றொழில் அமைச்சரும் வடபகுதி மீனவர்க ளின் வாழ்வாதாரத்தையும் மீன் வளத்தையும் அதிகரிக்கும் நோக் கோடு இரண்டு மாதங்களுக்கு முன்பாக திருகோணமலை பிரதே சத்திலும், தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தின் காங்கேசன்துறை மற்றும் நெடுந்தீவை அண்மித்த இலங்கை கடல் எல்லைக்குள், இலங்கை மீனவர்களுக்கு குறிப் பாக யாழ்ப்பாண மாவட்ட மீனவர் களுக்கு பாதிப்பு இல்லாத வகை யில் எங்களுடைய கடல் வளத் தைப் பாதுகாத்து மீன் வளத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கோடு பஸ்களை கடலுக்குள் போடப்படும் செயற்பாடு நடைபெற்றுக்கொண் டிருக்கின்றது. அந்த செயற் பாட்டை யாழ்ப்பாண மாவட்ட மீனவ சமூகமும் கடற்றொழிலா ளர் கூட்டுறவுச் சங்கங்களும் வர வேற்று நிற்கின்றோம்.

தமிழ்நாட்டின் கடலோரப் பிரதே சங்களில் இது போன்ற பழைய இரும்புகள் கடலுக்குள் போடப் பட்டு வருகின்றன. இதனை அறி யாதவர்கள் போன்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்திய இழுவைப்படகுகள் எமது பகுதி பவளப்பாறைகளையும் கடல் வளங்களையும் அழிக்கும் செயற்பாட்டை இலங்கை அரசு கண்டித்து நிறுத்த வேண்டும்.

இந்தத் திட்டத்தை மருதங்கேணி பிரதேசம் தொடக்கம் கச்சதீவுவரை மேற்கொள்ளவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதுதவிர, எரிபொருள் விலை யேற்றமும் மீனவர்களைப் பாதித் திருக்கின்றது. எனவே, மிகவிரை வில் எரிபொருளுக்கு மானியங் களை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம் - என்றார். (த-20)

# எரிவாயு விலை அதிகரிக்காது

## நேற்றைய பேச்சு நடக்கவில்லை அமைச்சர் வாசு தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 18

எரிவாயு விலை தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச் சரவை உபகுழுவுக் கும் எரிவாயு நிறுவ னங்களுக்குமிடை யில் நேற்று நடை பெறவிருந்த பேச்சு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் திங் கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவை உபகுழு அங்கத்தவரான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித் தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

எரிவாயு நிறுவனங்களான லிட்ரோ மற்றும் லாப் காஸ் நிறுவனங்கள் சமையல் எரிவாயு சிலிண் டரின் விலையை அதிகரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து மேற்கொண்டு வரு கின்றன. டொலரின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் உலக சந்தையில் காஸ்விலை உயர்ந்துள்ளதை அடிப்படையாகக்கொண்டே விலை அதிகரிக்க அனுமதிகோரி வருகின்றன.

இவர்களின் கோரிக்கை தொடர்பில் வாழ்க்கைச் செலவு தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள 5 பேர் கொண்ட அமைச்சரவை உபகுழு ஆராய்ந்து, எரிபொருள் நிறுவன பிரதானிகளு டன் கடந்த இரண்டு தினங்களாக பேச்சு நடத்தி யது.

நாட்டின் தற்போதைய கொவிட் நிலைமையில் மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள னர். எனவே, விலை அதிகரிப்பை ஒருபோதும் மேற்கொள்ள முடியாது. அதற்கு மாற்று ஏற்பா டுகள் இருக்குமாக இருந்தால், அது தொடர்பில் சமர்ப்பிக்குமாறு எமது குழு தெரிவித்திருந்தது. அதன் பிரகாரம் இது தொடர்பாக நேற்று கலந் துரையாடி தீர்மானம் ஒன்றுக்கு வர இருந்தபோ தும் தவிர்க்க முடியாத காரணத்தால் பேச்சு நடைபெறவில்லை.

எனினும், திங்கட்கிழமை நடைபெறும் பேச்சின் போது இணக்கப்பாடொன்றுக்கு வர முயற்சிப் போம். இப்போதைக்கு எரிபொருள் விலை அதி கரிக்கப்படாது - என்றார். (த-இ)

# தமிழர் தாயகப் பகுதிகளுக்கு தடுப்பூசியை அனுப்புங்கள்

***அமெரிக்காவிடம் வவுனியா உறவுகள் கோரிக்கை***

வவுனியா, ஜூன் 18

"கொவிட் தடுப்பூசியை நேரடியாக தமிழர் தாயகத் துக்கு அனுப்புமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைட னைக் கேட்டுக்கொள்கின்றோம்" என்று வவுனியா வில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் வன்னியிலி ருந்து ஒரு அன்பான கோரிக்கையை விடுக்கின்றோம். எங்களுக்கு அவசரமாக கொவிட் - 19 தடுப்பூசி மற் றும் உணவுப்பொருள்கள் தேவை.

கொவிட் - 19 தொற்றால், தமிழர்கள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர். எனவே, கொவிட் - 19 தடுப்பூசியை நேரடியாக தமிழர் தாயகத்துக்கு அனுப்புமாறு அமெ ரிக்க ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கிறோம். தடுப் பூசி ஏற்றுவதற்கு, சிவில் அல்லது இராணுவமாக இருக்கக்கூடிய சில மருத்துவ பயிற்சி பெற்றவர்களை அனுப்புமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழர்கள் உணவு, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாது தவிக்கிறார்கள். தொற்றுக் காரணமாக தமிழ் தாயகத்தை பூட்டியதால், பெரும் பாலான தமிழர்களுக்கு தினசரி வருமானம் இல்லை. எனவே அவர்கள் உணவுப்பொருள்களை வாங்குவ தற்கு பணம் இல்லை. ஆகவே தமிழ் பகுதிகளுக்கு உணவு வகைகளை அனுப்புமாறும் கேட்டுக்கொள் கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்க ளால் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டம் இன்றுடன் (நேற்று) ஆயிரத்து 582 ஆவது நாளாகிவிட்டது.

இந்தநிலையில், சிறிலங்காவுக்கான புதிய அமெரிக் கத்தூதர் திருமதி ஜூலி சுங்கை வரவேற்கிறோம். இந்த ஆண்டில் எப்போதாவது ஒருநாள் அம்மையாரை சந்திக்க விரும்புகிறோம் - என்றனர். (த-110)

# ஹரின் எம்.பியின் வீட்டில் பொலிஸார் திடீர் சோதனை

கொழும்பு, ஜூன் 18

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவின் வீட்டில் பொலிஸார் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

வத்தளையிலுள்ள அவரது வீட்டில் கூட்டம் ஏதாவது நடைபெறுகிறதா என்று விசாரித்தனர் என்று தெரி விக்கப்பட்டது. அவரது வீட்டைச் சுற்றியுள்ள வீதிக ளிலும் பொலிஸாரின் பிரசன்னம் இருந்தது.

பொதுமக்களை ஏற்றிய பஸ் ஒன்று அவரது வீட்டுக் குச் சென்றது பற்றிய தகவல் தமக்கு கிடைத்தது என்றும், அதனால் வீட்டை சோதனையிட்டோம் என் றும் பொலிஸார் கூறிச் சென்றுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டது. (த-இ)

# கூட்டமைப்பு - ஜனாதிபதி இரகசியமான சந்திப்பா?

## கேள்வியெழுப்புகிறார் சுரேஸ்

கொழும்பு, ஜூன் 18

"கூட்டமைப்பு - கோத்தாபயவுக்கு இடையே பேச்சு நடக்க இருந்தது எனவும், குறித்த பேச்சு திடீரென இரத்தானது எனவும் அறியமுடிகி றது. குறித்த பேச்சு இரகசியமாக நடத்த திட்டமிடப்பட்டதா? என்று சந்தேகம் எழுகின்றது" என்று ரெலோவின் சுரேஸ் பிறேமச்சந்தி ரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த 8ஆம் திகதி பேச்சு நடத்த ஜனாதிபதி கோத்தாபயவுக்கு சம்பந் தன் அழைப்புவிடுத்தார் என்றும், அதனை ஏற்று ஜனாதிபதி சம்மதித் தார் என்றும், இது தொடர்பில் ஊட கங்களோ பொதுமக்களோ அறிந் திருக்கவில்லை என்றும், குறித்த பேச்சுவார்த்தையில் என்ன விடயங் கள் பேசப்படவிருக்கின்றன என் பதை பொதுமக்களோ கூ ட்டமைப் பின் பங்காளிக்கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் தலைவர்களோ அறிந்திருக்கவில்லை என்றும், குறித்த பேச்சு இரகசியமாக நடத் தத் திட்டமிடப்பட்டதா என்றும் சந்தே கம் எழுகின்றது.

கடந்த அரசில் அங்கத்துவம் வகித்து, புதிய சட்டவரைவை நிறை வேற்றமுடியாமல் இருந்த சூழலில், இப்போது, கோத்தாபயவுடன் புதிய அரசமைப்பு பற்றி பேசவுள்ளனர் என்று தெரிவித்திருப்பது வியப்பா கவுள்ளது.




பேச்சு நடத்துவது நல்லது. அது தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்க்கட்சிகளுக்கும் தெரியப்படுத்தப்படவேண்டும். கடந்த அரசின் காலத்தில் விட்ட தவறுகளை திருத்தி தமிழ் மக்களை பிரதிநிதித்து வப்படுத்தி செயற்பட வேண்டும். எடுக்கப்படும் முடிவுகள் பற்றி கூட் டமைப்பின் பங்காளிக்கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் ஆகியவை யும் அக்கறைசெலுத்தி செயற்பட வேண்டும் - என்றார். (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரூ. 48 லட்சம் பெறுமதியான

# தானியங்கி ஆர்.என்.ஏ. பிரித்தெடுப்பு இயந்திரம் பல்கலைக்கு அன்பளிப்பு

### பி.சி.ஆர். பரிசோதனை அதிகரிக்கும்








யாழ்ப்பாணம், ஜுன் 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்வதற்கு அத்தியாவசியமாக இருந்த தானியங்கி ஆர்.என்.ஏ. பிரித்தெடுப்பு இயந்திரம், சுவிஸ் சூரிச் நகரைச் சேர்ந்த எஸ்.கே.ரி. வர்த்தக நிலைய உரிமையாளர் சுப்பிரமணியம் கதிர்காமநாதனின் நிதிப் பங்களிப்பில் கொள்வனவு செய்யப்பட்டு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் கடந்த ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன். பல்கலைக்கழகத்துக்கு அமெரிக்காவின் யு.எஸ்.எயிட் நிறுவனத்தால் பி.சி.ஆர். இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும் அதற்குத் தேவையான தானியங்கி ஆர்.என்.ஏ. பிரித்தெடுப்பு இயந்திரம் இல்லாத நிலைமை நீடித்தது. மனித வலு ஊடாகவே இதுவரை காலமும் அந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் தாமங்கள் ஏற்பட்டிருந்தன. அத்துடன் குறிப்பிட்டளவான பி.சி.ஆர். பரிசோதனைகளே மேற்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. இலங்கையில் உள்ள அனைத்து பி.சி.ஆர். ஆய்வுகூடங்களிலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை உட்பட தானியங்கி ஆர்.என்.ஏ. பிரித்தெடுப்பு இயந்திரம் இருந்த போதிலும், பல்கலைக்கழக மருத்துவபீடத்திலேயே இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் முன்னாள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, சுவிஸ் சூரிச் நகரைச் சேர்ந்த கொடையாளரான சுப்பிரமணியம் கதிர்காமநாதனுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தினரை தொடர்புபடுத்தி மேற்படி இயந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு உதவி செய்துள்ளார். 48 லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி இயந்திரம் உடனடியாக மருத்துவபீடத்துக்கு கொண்டு வரப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தை சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.



பல்கலைக்கழகத் துணைவேந்தர் மூத்த பேராசிரியர் சிறி சற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மருத்துவபீட பேராசிரியர் எஸ்.ரவிராஜ், ஒட்டுண்ணியல் திணைக்களத்துறைத் தலைவர் ஏ.முருகானந்தன், நுண்ணுயிரியல் திணைக்களப் பேராசிரியர் திருமதி கலாமதி முருகானந்தன், பட்டப்பின் படிப்பு பீடாதிபதி பேராசிரியர் கண்ணதாசன், மருத்துவபீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ரமேஷ் மற்றும் ஆய்வுகூடத்தில் பணியாற்றும் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன் கொடையாளர் கதிர்காமநாதன், மருத்துவமனை முன்னாள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த நிகழ்வில் இணைந்துகொண்டனர்.

அன்பளிப்பாக வழங்கப்பட்ட கருவி ஊடாக அரை மணி நேரத்தில் 48 மாதிரிகள் பிரித்தெடுப்பு செய்ய முடியும். இதனால் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஆகக்கூடியது ஒரு நாளில் 400 பி.சி.ஆர். மாதிரிகள் எதிர்வரும் நாள்களில் சோதனை செய்யக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5.319)

## ஓட்டமாவடியில் 649 சடலங்கள் அடக்கம்

ஓட்டமாவடி, ஜுன் 18

கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம்செய்யும் ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவில் "மஜ்மா நகரில்" அமைந்துள்ள கொரோனா மையவாடியில் நேற்றுமுன்தினம் மாலைவரை 649 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் தெரிவித்தார். அதன்படி, 612 முஸ்லிம்களின் ஜனாஸாக்களும், 15 இந்துக்களின் உடல்களும், 14 கிறிஸ்தவர்களின் உடல்களும், 6 பௌத்தர்களின் உடல்களும், 2 வெளிநாட்டவர்களின் உடல்களுமாக மொத்தம் 649 உடல்கள் அடக்கம்செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். (த-30)

# பணம் இருந்தாலும் கொடை வழங்க மனம் வேண்டும்

### பல்கலைக்கு அன்பளிப்புச்செய்த நாதனுக்கு துணைவேந்தர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜுன் 18

பணம் இருந்தாலும் அதில் தானம் செய்வதற்கும், கொடை வழங்குவதற்கும் மனம் வேண்டும். அந்த வகையில் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் தேவையறிந்து உதவி செய்த எஸ்.கே.நாதனுக்கு மிகப் பெரும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மூத்த பேராசிரியர் சிறி சற்குணராஜா தெரிவித்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு 48 லட்சம் ரூபா பெறுமதியான தானியங்கி ஆர்.என்.ஏ. பிரித்தெடுப்பு இயந்திரம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. இந்தச் சம்பிரதாயபூர்வ நிகழ்வு பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே துணைவேந்தர் மேற்கண்டவாறு கூறினார்.

'எமது சமூகத்துக்காக சவால்களுக்கு மத்தியில் இங்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களுக்குப் பல்வேறு தேவைகள் இருக்கின்றன. பொருளாதார ரீதியான பங்களிப்பு அவர்களுக்கு கிடைத்தால் இங்கு மேற்கொள்ளப்படும் சோதனைகளை அதிகரிக்க முடியும். அதில் ஒன்று இன்று நிறைவேறியிருக்கின்றது. அதனை வழங்கி உதவி செய்த நாதனுக்கு மிகப் பெரிய நன்றிகள். போர்க் காலத்தில் கூட எமது மக்கள் எவரும் பட்டினியால் சாகவில்லை. அந்தளவு தூரத்துக்கு எம்மவர்கள் ஏதோ ஒரு வகையில் கைகொடுத்து உதவியிருக்கின்றனர்' -என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி எஸ்.ரவிராஜ், பணம் இருந்தாலும் கொடுப்பதற்கு மனம் வேண்டும். அது நாதனுக்கு இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் இங்குதான் பி.சி.ஆர். சோதனை ஆரம்பிக்கப்பட்டது. துறைத் தலைவர் முருகானந்தன் இல்லையெனில் அது இங்கு சாத்தியமாகியிருக்காது. இப்போது வழங்கப்பட்ட உபகரணம் ஊடாக அதிகமான சோதனைகளை விரைந்து மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்- என்றார்.

ஒட்டுண்ணியல் திணைக்களத் துறைத் தலைவர் ஏ.முருகானந்தன் கருத்துத் தெரிவிக்கும் போது நாம் எமது எல்லைக்கு மீறியே இது வரை பி.சி.ஆர். சோதனைகளை இங்கு மேற்கொண்டு வந்தோம். எமக்கு உள்ள வளங்களின் அடிப்படையில் 250 பி.சி.ஆர். பரிசோதனைகளே நாளொன்றுக்கு செய்ய முடியுமாக இருக்கும். ஆனால் 350 பரிசோதனைகள் வரையிலும் செய்துள்ளோம். இங்கு அதிகரித்துள்ள சோதனைகளுக்கு ஈடு கொடுக்க எமக்கு தன்னியக்க ஆர்.என்.ஏ. பிரித்தெடுப்பு இயந்திரம் தேவையாக இருந்தது. அரசியல்வாதிகள் தொடக்கம் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை முன்வைத்திருந்தோம். எமக்கு சாதகமான பதில் எந்தத் தரப்பிடம் இருந்தும் கிடைக்கவில்லை. இந்த நிலையிலேயே நாதன் ஊடாக இயந்திரம் எமக்குக் கிடைத்துள்ளது- என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த கொடையாளர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன், உபகரணங்களை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாறான உதவிகளை புலம்பெயர் நாட்டில் உள்ள எமது உறவுகள் செய்வார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. இவ் உபகரணம் ஊடாக விரைவாக கொரோனா பரிசோதனையை செய்வதன் மூலம் எமது உறவுகளை காக்க முடியும்- என்றார். (ஒ.5.319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கோம்



## இராணுவத் தளபதி மறுப்பு

**கொழும்பு, ஜூன் 18**

**இணையம் ஊடாக மதுபானம் விற்பனைசெய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

இணையம் ஊடாக மதுபானம் விற்பனைசெய்வதற்கு நிதியமைச்சு அனுமதி வழங்கியிருந்தது.

குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கு இராணுவத் தளபதி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் கொவிட் பரவல் நிலைமையைக் கருத்தில் கொண்டு, இணையத்தளம் ஊடாக மதுபானம் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாட்டால், அனைத்து மதுபானசாலைகளும் மூடப்பட்டுள்ளன. இதற்கிடையில் சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை என்பவை அதிகரித்துள்ளன. எனவே, சட்டரீதியாக மதுபான விற்பனையை இணையத்தளம் மூலமாக மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு, மதுவரித் திணைக்களம் முன்வைத்த கோரிக்கைக்கு நிதியமைச்சு அனுமதி வழங்கியது. இந்த நிலையில் இணையவழி மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்குவதற்கு எதிராக, மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். (எ-4)

# ஒன்லைனில் மது விற்பனை சுகாதார அமைச்சும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 18

நாட்டில் கொரோனாத் தொற்று வேகமாக பரவும் தருணத்தில், மதுபான விற்பனை அவசியமில்லை. ஒன்லைனில் மது விற்பனைசெய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தாலும், கொரோனாவால் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த நிலைமை மேலும் இரண்டு முதல் மூன்று வாரங்களுக்குத் தொடரும்.

பயணக் கட்டுப்பாட்டால் கிராமங்களில் சட்டவிரோத மதுபான வர்த்தகம் அதிகரித்துள்ளது. இதற்கான தீர்வாகவே ஒன்லைனில் மது விற்பனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தை தனிப்பட்ட முறையில் எதிர்க்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# இணையத்தில் மது விற்பனை: சட்டவிரோதமான நடவடிக்கை

## வலுக்கின்றது எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 18

இணைய வழியில் மதுபானங்களை விற்பனைசெய்வது, சட்டவிரோதமான நடவடிக்கை என்று இலங்கையின் மதுபான அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் அஜித் உடுகம தெரிவிக்கையில்,

இந்த முறைமை ஊடாக மதுபானங்களைக் கொள்வனவுசெய்ய முடியாத 21 வயதுக்குக் குறைந்தவர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் போன்றவர்கள் மதுபானத்தைக் கொள்வனவு செய்யும் நிலைமை ஏற்படும்.

இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்- என்றார். (எ-4)

# சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் திருட்டு!

## இரண்டு பேர் கைது

கொழும்பு, ஜூன் 18

சைனோஃபோர்ம் தடுப்பூசிகளை திருடினர் என்ற குற்றசாட்டில், இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

காலி, ஹபராதுவ சுகாதார மருத்துவ அதிகாரியின் காரியாலயத்தில் சேவையாற்றும் சாரதி மற்றும் சிற்றூழியர் ஆகிய இருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஹபராதுவ சுகாதார மருத்துவ அதிகாரி பிரமோத எம்.சிறிவர்த்தனவால், ஹபராதுவ பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலி, ஹபராதுவ சுகாதார மருத்துவ அதிகாரியின் அலுவலகத்தில் இருந்த 30 தடுப்பூசிகள் இவ்வாறு திருடப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 90 ஆயிரம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# குறைந்த நிறையில் எரிவாயு சிலிண்டர்

## நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஜூன் 18

நிர்ணயிக்கப்பட்ட அளவில் எரிவாயு நிரப்பப்படாமல், சிலிண்டர்கள் விற்பனைசெய்யப்பட்டமை தொடர்பில், நுகர்வோர் விவகார அதிகார சபையால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோரை ஏமாற்றினர் என்ற குற்றச்சாட்டுடன், மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறைந்த நிறையுடைய எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்த கொழும்பு 2 பகுதியைச் சேர்ந்த விற்பனை நிலையம், அந்த விற்பனை நிலையத்துக்கு சிலிண்டர்களை விநியோகித்த வத்தளை பகுதியிலுள்ள நிறுவனம் மற்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் ஆகியவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கின் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இந்த வழக்கு தொடர்பான விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# எம்.பிக்களுக்கு சொகுசு வாகனம்: உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு, ஜூன் 18

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தீர்மானத்துக்கு எதிராக, மக்கள் விடுதலை முன்னணியினரால், உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நாடளாவிய ரீதியில் வியாபித்து, மக்கள் துன்பங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில், சொகுசு வாகனங்களை இறக்குமதிசெய்வதற்கு அரசால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம், இலங்கை அரசமைப்புக்கு முரணாகக் காணப்படுகின்றது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல்செய்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால், வாகன இறக்குமதிக்கான நிதியை அரசின் கணக்குகளுக்கு வைப்பிலிடுமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடுமாறும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக வெளியிடப்பட்டுள்ள கடன் தவணைக்கான ஆவணம் மற்றும் வரிச்சலுகை ஆகியவை இலங்கை வங்கியால் வழங்கப்பட்டமை சட்ட விரோதமானது என்று உத்தரவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, பிரதமர் தலைமையிலான அமைச்சரவை, இலங்கை வங்கி, சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் உள்ளிட்ட 31 பேர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (4)




# ஒருவாறாக இலங்கைக்கு வருகிறது 2 லட்சம் அஸ்ராசெனெகா தடுப்பூசி

கொழும்பு, ஜூன் 18

உலக சுகாதார அமைப்பின் ஊடாக, அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு மிகவும் தேவையான அஸ்ராஜெனகா தடுப்பூசிகளில் 2 லட்சத்து 64 ஆயிரம் டோஸ்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக சுகாதார அமைப்பு ஏற்கனவே தமது அதிகாரபூர்வ கடிதத்தில் இலங்கையின் சுகாதார அமைச்சுக்கு இதனை உறுதிப்படுத்தியிருந்தது.

ஏற்கனவே ஆறு லட்சம் பேர் இந்தத் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுள்ள நிலையில், அவர்களுக்கு இரண்டாம் டோஸைச் செலுத்த வேண்டியுள்ளது.

அதனடிப்படையில் இலங்கைக்குக் கிடைக்கவுள்ள 2 லட்சத்து 64 ஆயிரம் டோஸ்களுக்கு மேலதிகமாக 3 லட்சத்து 36 ஆயிரம் டோஸ்கள் தேவைப்படுகின்றன. ஏற்கனவே ஒரு மில்லியன் பைசர் தடுப்பூசிகளை இலங்கையின் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது. அத்துடன் அதனை அஸ்ராஜெனகா தடுப்பூசிக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய ஏதுநிலை ஆராயப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாட்டத்தை தடுக்காவிடில் பயணக் கட்டுப்பாடு நீடிக்கும்?

கொழும்பு, ஜூன் 18

தற்போது நடைமுறையில் உள்ள போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாது விட்டால், போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை நீடிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் பத்மா குணரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூகத்துக்குள் பொதுமக்கள் நடமாட்டம் வழமையாகக் காணப்படுவதால், போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகின்றது.

இதனை நாங்கள் அலட்சியமாக எடுக்க முடியாது. போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை இறுக்கமாக்க வேண்டும். தேவையற்ற நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தற்போதைய கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டால், திடீரென தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் - என்றார். (எ-4)

# கட்டுப்பாடுகள் நீக்கம் பி.சி.ஆர். முடிவுகளில்

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 18**

**எதிர்வரும் நாள்களில் கிடைக்கவுள்ள பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே, எதிர்வரும் 21 ஆம் திகதியின் பின்னர் பயணக்கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவிக்கையில்,

தற்போது தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களுக்கு 10 நாள்களின் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படுவதில்லை. 14 நாள்களின் பின்னர் அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

எதிர்வரும் நாள்களில் எழுமாறான பரிசோதனைகள் ஊடாக நாட்டின் நிலைமையை அவதானிக்கவுள்ளோம். அதற்கமைவாக தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (எ-4)

# இலங்கைக்கு 75ஆவது இடம்



கொழும்பு, ஜூன் 18

இலங்கையில் கொரோனாத் தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இலங்கை உலகளாவிய பாதிப்பு அடிப்படையில் 75ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இலங்கையில் 3 ஆவது அலையாக புதுவருடக் கொத்தணி தீவிரம் பெற்றுள்ள நிலையில், இதுவரை 2 லட்சத்து 29 ஆயிரத்து 889 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் உலகளாவிய ரீதியில் கொரோனா பாதித்த நாடுகள் பட்டியலில் 75 ஆவது இடத்துக்கு இலங்கை முன்னேறியுள்ளது.

இலங்கைக்கு முதல் 2 லட்சத்து 40 ஆயிரத்து 708 தொற்றாளர்களுடன் ஓமான் 74 ஆவது இடத்தில் உள்ளது.

3 கோடி 43 லட்சத்து 52 ஆயிரத்து 329 தொற்றாளர்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. 2 கோடி 96 லட்சத்து 33 ஆயிரத்து 105 தொற்றாளர்களுடன் இந்தியா 2 ஆவது இடத்திலும், ஒரு கோடி 75 லட்சத்து 43 ஆயிரத்து 853 தொற்றாளர்களுடன் பிரேஸில் 3 ஆவது இடத்திலும் உள்ளமை - குறிப்பிடத்தக்கது. (எ-4)

# அனைவருக்கும் பரிசோதனை



கொழும்பு,ஜூன் 18

எதிர்வரும் 21 ஆம் திகதி பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு முன்னர், நாடு முழுவதும் கொவிட் -19 வைரஸ் பரவலைக் கண்டறிய, தொடர்ச்சியான துரித அன்டிஜென் சோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உள்ளூர் சுகாதார திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய கொவிட் பரவல் நிலைமையை இந்தச் சோதனை மூலம் அறியலாம். அத்துடன் தினசரி பி.சி.ஆர்.சோதனையும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# செஞ்சிலுவை சங்கத்தால் இலங்கைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

கொழும்பு,ஜூன் 18

செஞ்சிலுவை சங்கத்தால் ஒரு லட்சத்து 67 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொவிட் -19 தடுப்பு செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டன.

குவைத்துக்கான இலங்கை தூதுவரின் வேண்டுகோளுக்கு அமைவாக இலங்கை அரசாங்கத்தின் கொவிட்-19 தடுப்பு செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக குவைத் செம்பிறை சங்கத்தால் இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

குறித்த மருத்துவ உபகரணங்களை ஔடதங்கள் உற்பத்தி மற்றும் வழங்கல் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளரிடம் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் அருண லேகமேவால் குவைத் செம்பிறை சங்கம் மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் சார்பாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கையளித்தார். (ஐ-19)

# மருத்துவமனைகளை நாடாத முதியவர்கள்

கொழும்பு, ஜூன் 18

புதிய கொரோனா வைரஸ் பரவத் தொடங்கிய பின்னர், முதியவர்கள் ஏனைய நோய்களுக்கு மருத்துவமனைகளுக்குச் செல்லத் தயங்குகின்றனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் உட்பட அனைத்து நோய்களுக்கும், பொதுமக்கள் குறிப்பாக முதியவர்கள் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மருத்துவமனைக்குச் செல்ல மக்கள் தயங்குவதால் உயிரிழப்புகள் அதிகரிக்கின்றன. இலவச மருத்துவ சேவைகளைப் பெறுவதற்கான தொலைபேசி இலக்கங்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அந்தத் தொலைபேசி இலங்கங்கள் மூலம் அல்லது குடும்ப மருத்துவர்கள் அல்லது அருகில் உள்ள மருத்துவமனைக்குச் செல்வதன் மூலம் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)



# பல வைரஸ்கள் உருவாக வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 18

தற்போது பரவும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தத் தவறினால், எதிர்காலத்தில் மேலும் பல வைரஸ்கள் உருவாகலாம் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பி117 கொரோனா வைரஸிலிருந்தே மூன்றாவது அலை நாட்டில் ஆரம்பமானது. இது வேகமாக பரவக்கூடியது. இதனால் பல பாதிப்புக்களும், உயிரிழப்புகளும் ஏற்பட்டன.

கொரோனா வைரஸால் ஒருவர் பாதிக்கப்பட்டு இரண்டு மூன்று வாரங்களின் பின்னரே, உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. அதிகமான உயிரிழப்புக்கள் இரண்டு மூன்று வாரங்களின் பின்னரே இடம்பெற்றுள்ளன. எனவே கொரோனா வைரஸ் எந்தச் சூழ்நிலையிலும், எந்தத் தருணத்திலும் மாற்றமடையலாம் - என்றார். (எ-4)

# அதிகரிக்கும் கைது

## நேற்றும் 1,561 பேர்

கொழும்பு, ஜூன் 18

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் ஆயிரத்து 561 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களில் அதிகமானோர் குளியாப்பிட்டி, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரை 36 ஆயிரத்து 921 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையம் மூலம் சிறுமி விற்பனை

## பெண்ணொருவரும் கைது

**கொழும்பு, ஜூன் 18**

**இணையம் மூலம் 15 வயதுச் சிறுமியை பாலியல் நடவடிக்கைகளுக்காக பல்வேறு நபர்களுக்கு, விற்பனைசெய்வதற்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**



கல்கிஸைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னதாக சந்தேக நபர் ஒருவர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருந்தார். தற்போது 26 வயதுடைய பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தெல்கொடவைச் சேர்ந்த குறித்த சிறுமியை சுமார் 4 மாதங்களாக வீட்டில் மறைத்து வைத்திருந்தவர்கள், பல்வேறு நபர்களுக்கு பாலியல் நடவடிக்கைகளுக்காக விற்பனை செய்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இணையம் மூலம் தொடர்பு கொண்ட நபர்கள் இருக்கும் இடங்களுக்கு, இந்தச் சிறுமியை நேரடியாக அழைத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஜம்புரலிய மடபாதப் பகுதியைச் சேர்ந்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## வறுமையில் சிக்கிய சிறுவன் பாலியல் வன்கொடுமைக்கு

கொழும்பு, ஜூன் 18

வறுமையில் சிக்கியிருந்த 16 வயதுச் சிறுவன் ஒருவன், 5 வருடங்களாக பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தலங்கம பொலிஸ் பிரிவில் நடந்துள்ளது.

புத்தளம் மதுரங்குளி பிரதேசத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட சிறுவனின் தாய் குடும்பத்தை விட்டுச் சென்றதால், சிறுவனின் தந்தை, நண்பர் ஒருவரின் உதவியுடன், சிறுவனை வளர்ப்பதற்காக தலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரிடம் ஒப்படைத்துள்ளார். குறித்த நபர் இன்னொரு சிறுவனையும் வளர்ப்பதற்குக் கோரியதால், மதுரங்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய மற்றுமொரு சிறுவனும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டார். எனினும் அந்தச் சிறுவன் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், முதலில் ஒப்படைக்கப்பட்ட சிறுவன் தான் முகங்கொடுக்கும் பாலியல் கொடுமைகளைப் பதிவுசெய்து இரண்டாவது சிறுவனின் கைப்பேசிக்கு அனுப்பியுள்ளார்.

இதனையறிந்த சிறுவனின் தந்தை தலங்கம பொலிஸில் முறைப்பாடுசெய்துள்ளார். சிறுவன் மற்றும் சந்தேகநபரான பாதுகாவலர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

## ஹெரோய்னுடன் சகோதரர்கள் கைது


கொழும்பு,ஜூன் 18

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மூவர் மற்றும் அவர்களது உறவுமுறைப் பெண் ஒருவர் உள்ளிட்ட நால்வர் சபுகஸ்கந்த பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சபுகஸ்கந்த சந்தியில் பொலிஸ் சோதனைச் சாவடியைக் கடக்க முயன்ற முச்சக்கரவண்டியை, வழிமறித்து பொலிஸார் சோதனை மேற்கொண்டனர்.

அதன்போது முச்சக்கரவண்டியில் அமர்ந்திருந்த பெண்ணின் கைப்பையிலிருந்து ஹெரோய்ன் மற்றும் போதைப் பொருள் தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் பொருள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர். மேலதிக விசாரணைகளின் பின்னர், பேலியகொட பொரணுவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில், போதைப்பொருள் தயாரிப்பில் ஈடுபட்டு வந்த குடும்பத்தினரை பொலிஸார் கைதுசெய்தனர்.

அவர்களிடம் 12 லட்ச ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)



## கரையொதுங்கின ஆளில்லா படகுகள்

கொழும்பு, ஜூன் 18

இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான இரண்டு படகுகள், ஆள்கள் எவருமில்லாத நிலையில் கரையொதுங்கியுள்ளன.

சிலாபம் உடப்பு சின்னபாடு கடற்கரைப் பகுதியில் குறித்த படகுகள் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டன என்று உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட இரண்டு மீன்பிடி படகுகளே இவ்வாறு கரையொதுங்கியுள்ளன.

இரண்டு படகுகளிலும் பல கையுறைகள், இந்தியாவில் பயன்படுத்தப்படும் ஒரு சிறிய வெற்றிலை மற்றும் 6 பிளாஸ்டிக் கான்களும் படகிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் இலங்கைக் கடற்படையினர் மற்றும் உடப்பு பொலிஸார் ஆகியோர் தீவிர விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (எ-4)

## உரத் தட்டுப்பாட்டுக்கு உடன் தீர்வு அவசியம்

### அமைச்சர்கள் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 18

நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள உரத் தட்டுப்பாட்டுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என்று அமைச்சர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில்,

அமைச்சர்களான சமல் ராஜபக்ச பந்துல குணவர்தன, ரமேஷ் பத்திரண, ஜனக பண்டார தென்னக்கோன், மஹிந்த அமரவீர, வாசுதேவ நாணயக்கார, எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உரப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்படவில்லை என்றால், பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். விவசாயிகளும் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கம, நாட்டுக்குத் தேவையான உரம் இருப்பில் உள்ளது. விற்பனையாளர்கள் உரத்தைப் பதுக்கிவைத்திருப்பதாலேயே உரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (எ-4)

## பேர்ள் கப்பல் பாதிப்பு: மதிப்பிட ஐந்து குழுக்கள்

கொழும்பு, ஜூன் 18

இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றி மூழ்கியுள்ள, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பிடுவதற்கு, ஐந்து உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த கப்பலால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் தகவல்களை வழங்கலாம். இதற்காக 0112 44 54 47 என்ற பக்ஸ் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது; reformsShmog.gov.lk என்ற மின்னஞ்சல் மூலமாகவும் தகவல்களை வழங்க முடியும். எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனங்கள் தகவல்களை வழங்க முடியும் என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது. (எ-4)

## கடன்களை மீளப்பெறும் முறைமைகளில் மாற்றம்

### பிரதமர் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 18

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கடன்களை மீளப்பெற்றுக்கொள்ளும் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில், மத்திய வங்கி அதிகாரிகளுடன் அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பில் பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கினார்.

பெற்றுக்கொண்ட கடனுக்கான தவணைக் கட்டணங்களைச் செலுத்தும் போது, வட்டியை முதலில் செலுத்த வேண்டியிருப்பதால் கடனை திரும்பச் செலுத்த முடியாத நிலைக்கு கடனாளிகள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே வட்டி மற்றும் கடன் தொகையைச் செலுத்துவதற்கான முறைமையில் மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பிலும் பிரதமர் கவனம்செலுத்தினார்.

கொவிட்19 தொற்று நிலைமைக்கு மத்தியில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ள மக்களிடம், கடன்களை மீளப்பெறும்போது, அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் மத்திய வங்கி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.



கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவது தொடர்பில், இதன்போது மத்திய வங்கியின் பிரதிநிதிகள் பிரதமருக்கு விளக்கமளித்தனர் என்று பிரதமரின் ஊடகப்பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இலங்கைக்குள் டெல்டா

கொரோனா வைரஸ் திரிபுகளிலேயே மிகுந்த ஆபத்து உடையதாக அடையாளப்படுத்தப்பட்ட இந்தியத் திரிபான 'டெல்டா' வைரஸ் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் டெல்டா தொற்றுக்கள் இலங்கையில் அவதானிக்கப்பட்டவைதான். ஆனால் நேற்றைய இந்த அறிவிப்பு கவலையும் அச்சமும் தரக்கூடியது.

முன்னர் டெல்டா அவதானிக்கப்பட்ட போதெல்லாம் அவை ஆபத்து மிகுந்தவையாக இருக்கவில்லை. காரணம் சமூகத் தொற்றாக அல்லாமல் தனிமைப்படுத்தல் நிலையங்களில்தான் அந்த வைரஸ் தொற்றுக்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. ஆனால், இம்முறை சமூகத் தொற்றாக - அதுவும் மக்கள் தொகை அதிகமுள்ள கொழும்பில் மேற்படி தொற்றுக்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. ஒருவர் அல்ல இருவர் அல்ல ஐவர் இந்தத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் கொரோனாத் தொற்று இலங்கைக்குள் அவதானிக்கப்பட்டபோது ஒருவித பீதிநிலை எம்மை ஆட்கொண்டிருந்தது. ஆனால், கொரோனாத் தொற்று அதிகரிக்க அதிகரிக்க அதற்கு இசைவு பெற்றவர்களாக - பழக்கப்பட்டவர்களாக நாங்கள் மாறிவிட்டோம். இப்போது கொரோனா கோரத் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கின்றது. அன்றாடம் சராசரியாக 2,500 தொற்றாளர்கள் பதிவாகின்றனர். அவ்வப்போது 50, 75, 100 என்று இறப்புக்கள் அறிக்கையிடப்படுகின்றன. நாம் பெயர் சொல்லி அழைத்த நபர்களில் பலர் கொவிட் தொற்றுக்கு உட்படுகின்றமையைக் காண்கின்றோம். அவ்வளவுக்கு கொரோனா எம்மை நெருங்கிவிட்டது. ஆனால், அச்சம் என்பது தற்போது இம்மியும் இல்லை. கொரோனாவுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளைக் கைவிட்டவர்களாகத்தான் நாங்கள் வினையாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

இதே மெத்தனப்போக்கு தற்போது டெல்டா வைரஸ் விடயத்திலும் இருந்துவிடுமோ என்ற எண்ணம் மேலிடுகின்றது. டெல்டா வைரஸ் எவ்வளவு மோசமானது, மனிதப் பேரழிவை ஏற்படுத்தக்கூடியது என்பதற்கு இந்தியா சிறந்த உதாரணமாக எம் கண்முன்னே கட்டியம் கூறுகின்றது. எனவே டெல்டா பேரிடர், பெருந்தொற்று மேலும் தீவிரமாகாமல் காக்க வேண்டியது அரசின் கடமை மட்டுமல்ல எம் ஒவ்வொருவரதும் தார்மீகப் பொறுப்புமாகும்.

கொழும்பில்தானே இந்தத் தொற்று. வடக்கில் இல்லைதானே என்ற எண்ணம் வேண்டவே வேண்டாம். சீனாவில் எங்கோ ஒரு மூலையில் இருக்கக்கூடிய வுகானில் தோன்றிய கொரோனாதான் இன்று முழு உலகையும் ஆட்டிப் படைக்கின்றது. அவ்வாறிருக்கையில், கொழும்பில் அவதானிக்கப்பட்ட 'டெல்டா' வடக்குக்குள் ஊடுருவுவதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்ற யதார்த்தத்தை அனைவரும் புரிந்துகொள்வோம். உச்சக்கட்ட விழிப்பு ணர்வையும் சமூக இடைவெளியையும் சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றுவோம். பயணத் தடையை முழுமையாகக் கடைப்பிடித்து பயனுள்ளதாக மாற்றுவோம்.

அதேநேரம், அரசு டெல்டா தொற்றாளர்களின் வழித்தடங்கள் மற்றும் வலைப்பின்னல்களை துரிதமாகவும் துல்லியமாகவும் இனங்கண்டு தொற்றுச் சங்கிலியை உடைத்தெறிய தன்னாலான நடவடிக்கைகளையெல்லாம் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் டெல்டா தொற்றை எதிர்கொள்ளும் மருத்துவத்திடமோ பொருளாதாரப் பலமோ இலங்கைக்கு இல்லை.




## கொரோனாவால்

# வடக்கு ஆளுநர் அலுவலகத்தினர் மின்னஞ்சல் பார்ப்பதில்லையாம்

கிளிநொச்சி, ஜூன் 18

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்பட்ட கோரிக்கை தொடர்பில் விண்ணப்பதாரர் தொலைபேசியில் தொடர்புகொண்டு வினவியபோது கொரோனா காரணமாக மின்னஞ்சல் பார்ப்பதில்லை என தகவல் வழங்கும் அலுவலர் பதிலளித்துள்ளார்.**

கடந்த 10ஆம் திகதி அன்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு கிளிநொச்சியிலிருந்து ஊடகவியலாளர் ஒருவர் சில தகவல்களைக் கோரி விண்ணப்பித்திருந்தார். ஆனால் குறித்த மின்னஞ்சல் கோரிக்கைக்கு ஆளுநர் அலுவலகத்திலிருந்து நேற்று வரை எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை. இந்த நிலையில் குறித்த ஊடகவியலாளர், அலுவலகத்தின் குறித்த பகுதிக்கான தொலைபேசி இலக்கமான 021 - 2220660க்கு தொடர்புகொண்டு வினவிய போது கொரோனா காரணமாக மின்னஞ்சல் பார்ப்பதில்லை என்றும் உத்தியோகத்தர்கள் கடமைக்கு வருவதில்லை எனவும் தெரிவித்த உத்தியோகத்தர் விரைவில் பதில் அனுப்பி வைக்கப்படும் எனப் பதிலளித்துள்ளார். தற்போதைய கொரோனா சூழ்நிலையில் இயன்றளவு பணிகளை ஒன்லைன் மூலம் மேற்கொள்ளுமாறும், வீடுகளில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டு வருகின்ற நிலையில் மேற்குறித்த பதில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஊடகவியலாளர் தெரிவித்தார்.

(ப-214)

## மாகாணசபை முறைமையை

# பலவீனப்படுத்துவதே இந்த அரசின் திட்டம்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், ஜூன் 18

"மாகாணசபை முறைமையை பலவீனப்படுத்துவதே அரசின் திட்டம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பிரயோசனம் இல்லாத மாகாண சபை முறைமை தேவையில்லை என்று பேரினவாத சக்திகள் சொல்கின்றன. அவ்வாறிருக்கையில், மாகாண சபை முறைமையை மேலும் பலவீனமாக்கிவிட்டு அதில் எந்தப்



பிரயோசனமும் இல்லை என்று சொல்வது ஏற்புடையதல்ல.

இது அரசின் இரட்டை வேடம். அதாவது, தமிழர்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை இல்லாமல் செய்கின்ற நடவடிக்கைதான். தமிழ் மக்களின் கையில் இப்போது இருக்கின்ற ஒரேயோர் அரசியல் உரிமை மாகாண சபை முறைமை மட்டும் தான். 13ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக வந்த மாகாண சபைகளின் மருத்துவமனைகளைக்கூட மத்திய அரசு சுவீகரிக்கப் போகின்றது என்றால், மாகாண சுகாதார அமைச்சில் மருத்துவமனைகள் இல்லாத சுகாதார அமைச்சு அதைவைத்து என்ன செய்வது? மாகாணசபை முறைமைகளை பலவீனப்படுத்துவதற்கு இது ஒரு திட்டமிட்ட சதி - என்றார்.

(த-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுங்கோல் ஆட்சியைவிட கொரோனாவால் இறக்கலாம்

## முன்னாள் சபாநாயகர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 18**
**இலங்கையின் சர்வாதிகார மற்றும் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் அச்சத்துடனும், சந்தேகத்துடனும் வாழ்வதை விட, கொரோனாத் தொற்றால் உயிரிழப்பது மிகவும் ஆறுதலாக இருக்கும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் கொழும்பில் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நமது நாடு தற்போது மிகவும் கடுமையான மற்றும் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றது. கொடிய கொரோனா முழு நாட்டையும் சூழ்ந்துள்ளது. இந்த நெருக்கடிக்குள் தங்கள் அதிகாரத்தைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் ஆட்சியாளர்கள் முயல்கின்றனர்.
கொரோனாவை ஒரு தொற்றுநோயாக அதிகாரிகள் பார்க்கவில்லை. மாறாக அது வருமானம் தரும் வசந்தகாலமாகவே பார்க்கின்றனர்.
ஒரு நாடாக நாம் இந்தச் சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டுமானால், நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கைக்கு சரியான பாதுகாப்பை வழங்க வேண்டும்
அனைத்து கட்சிகளின் ஒப்புதலுடன் ஒரு விரிவான தேசிய வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.
இல்லையெனில் பொறுப்பானவர் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான உயிர்களை பலியிடுவதன் விளைவுகளைத் தவிர்க்க முடியாமல் அனுபவிக்க நேரிடும். அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம் பெறப்பட்ட சர்வாதிகார அதிகாரத்தின் காரணமாக இத்தகைய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய சபையில் இலங்கைக்கான தீர்மானம், நாட்டில் ஜனநாயகம் பலவீனமடைவதை எடுத்துக்காட்டியுள்ளது. மனித உரிமைகள் உட்பட மக்களின் அடிப்படை உரிமைகள் அப்பட்டமாக இங்கு மீறப்படுகின்றன- என்றார். (எ-4)

# 225ஆவது எம்.பியாக ரணில் பதவியேற்பார்

கொழும்பு, ஜூன் 18
இலங்கை நாடாளுமன்றில் 225 ஆவது உறுப்பினராக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்துள்ள ஒரேயொரு தேசியப் பட்டியலூடாக அவர் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார்.
எதிர்வரும் 22ஆம் திகதியன்று அவர் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், 23 ஆம் திகதியன்றே அவர் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 10 மாதங்களாக 224 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இயங்கிய இலங்கை நாடாளுமன்றுக்கு, ரணில் 225 ஆவது உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# ரணில் பதவியேற்பு: வர்த்தமானி இன்று

கொழும்பு, ஜூன் 18
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பது தொடர்பான வர்த்தமானி இன்று வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணையத்தின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (எ-4)

# பஸில் வருகைக்காக மற்றுமொரு நாடகம்

## ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 18
பஸில் ராஜபக்ச நாடு திரும்பியவுடன், எரிபொருள்களின் விலை குறைப்பு என்ற மற்றொரு நாடகம் அரங்கேற்றப்படலாம என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.
இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினரான பந்துல லால் பண்டாரிகொட தெரிவிக்கையில்,
அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலை குறைக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது.
எனவே அனுதாபம், கவலை தெரிவிக்காமல் எரிபொருள்களின் விலையைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ராஜபக்சக்களால் ஒரு மேசையில் தேநீர் குடிக்கும்போது கூட இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். நிலைமை இவ்வாறிருக்கையில் பந்து அங்கும், இங்குமாகப் பறிமாற்றப்படுகின்றது. தற்போதைய அரசியல் சர்வபலம் படைத்த நபரா பஸில் என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. எனினும், பஸில் ராஜபக்ச நாடு திரும்பிய கையோடு புதிய நாடகமொன்று கூட அரங்கேறலாம். அவர் வந்த பின்னர் எரிபொருள்களின் விலை கூட குறைக்கப்படலாம்- என்றார். அதே வேளை, அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜபக்ச எதிர்வரும் 2[illegible] ஆம் திகதி நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.(எ-4,44)

# மரண அறிவித்தல்



## திருமதி முத்துத்தம்பி சிவயோகம்

பெரியபளை, பளையைப் பிறப்பிடமாகவும் இல.135, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துத்தம்பி சிவயோகம் நேற்று (17.06.2021) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - திருமஞ்சனம் தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா முத்துத்தம்பியின் மனைவியும் தேவிவிமலா (ஆசிரியர் - கொ/விபுலானந்த த.வி), சாந்தாதேவி (ஆசிரியர் - யா/சன்மார்க்க வித்தியாலயம்), கருணாகரன் (வைத்தியர் - அவுஸ்திரேலியா), மஞ்சுளாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீகரன் (வைத்தியர் - மாலவ நெபில் பெணாண்டோ வைத்தியசாலை), காலஞ்சென்ற இராதாக்கிருஷ்ணன் (அதிபர்) மற்றும் மஞ்சுளா (அவுஸ்திரேலியா), சுதாகரன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், யுவன், வஜன், நிலக்சுமிகா, யார்த்தனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 7.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று, மு.ப 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.135, இராசாவின் தோட்ட வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P: 077 174 9285**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# இலங்கையின் சொத்துக்களை தாரைவார்க்க இடமளிக்கோம்

## போராட்டத்துக்கு தயாராகும் தொழிற்சங்கங்கள்

கொழும்பு, ஜூன் 18
இலங்கையிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் தொல்பொருள் பெறுமதி வாய்ந்த கட்டடங்களை, வெளிநாடுகளுக்கு ஒப்படைக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, விரைவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என்று நாட்டின் முன்னணி தொழிலாளர் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.
வெளிநாட்டவர்களுக்கு விற்கப்பட்ட அரச சொத்துக்களை மீளப்பெறுவோம் என்று உறுதியளித்து, ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு, நிதி அமைச்சின் கீழ் செலந்திவா என்ற நிறுவனத்தை அமைத்து வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களை கையகப்படுத்த திட்டமிட்டுள்ளது.
கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் தொல்பொருள் பெறுமதி வாய்ந்த பல கட்டடங்களை கையகப்படுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கொழும்பு பொது தபால் அலுவலகம், வெளிவிவகார அமைச்சு கட்டடம், இலங்கை வங்கியின் யோர்க் வீதி கட்டடம், ஹில்டன் ஹொட்டல், ஹைட் கட்டடம் மற்றும் கபூர் கட்டடம் ஆகியவற்றை முதல் கட்டமாக கையகப்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
இந்த கட்டடங்களில் பெரும்பாலானவை காலனித்துவ காலத்தில் கட்டப்பட்ட பழங்கால கட்டடங்களாகும்.
எனவே கொழும்பு கோட்டை பகுதியின் பொருளாதார மையங்களையும், சிறந்த வரலாற்று, கலாச்சார மற்றும் தொல்பொருள் மதிப்புள்ள கட்டடங்களையும் தனியார் துறைக்கு அல்லது சர்வதேச முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கான தீர்மானத்தை மாற்றியமைக்க வேண்டும்.
இது தொடர்பில் மதத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் ஆகியோருக்கு தெளிவுபடுத்துவோம்.
நாட்டில் ஏற்பட்டுள்ள தொற்றுநோய் நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி, நாட்டின் மதிப்புமிக்க பொதுச் சொத்தை சுரண்டுவதற்கும், விற்பனை செய்வதற்கும் எதிராக அனைத்து சக்திகளையும் ஒன்று திரள வேண்டும் என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பை அப்பட்டமாக மீறியே அதிகாரங்களைப் பிடுங்குகிறார்கள்

## சீறுகிறார் முன்னாள் சுகாதார அமைச்சர்

**வவுனியா ஜூன் 18**

**மாவட்ட பொது மருத்துவமனைகளை மத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர எடுக்கப்படும் நடவடிக்கையானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பை அப்பட்டமாக மீறும் செயல் என வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளருமான மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 14ஆம் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளென அரச தகவல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் ஒன்பது மாவட்ட பொது மருத்துவமனைகள் மாகாணசபை நிர்வாகத்திடம் இருந்து பலோத்காரமாக பறிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையானது இலங்கையின் அரசமைப்பை அப்பட்டமாக மீறும் செயலாகும். இம்மீறலுக்கு அரசு ஏற்கமுடியாத நகைப்புக்கிடமான காரணத்தைக் கூறியுள்ளது. அதாவது மாவட்டம் தோறும் ஒவ்வொரு மருத்துவமனைகளைத் தெரிவுசெய்து மத்தியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதனூடாக தேசிய மருத்துவமனைகளில் காணப்படும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் பல வருடங்களுக்கு முன் மத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையின் தரத்தை அவர்களால் ஒரு தேசிய மருத்துவமனையின் தரத்துக்கு கொண்டுவர முடிந்ததா? இல்லை என்பதே உண்மை. எனவே பொய்யான காரணங்களைக் கூறி மாகாணங்களுக்குப் பகிர்ந்த அதிகாரங்களைப் பறிப்பதே அவர்களது நோக்கமாக உள்ளது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபைகள் எவையுமே இல்லாத நிலையில் அரசமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டதினூடாக மாகாண சபைகளுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பறித்தெடுப்பதென்பது முற்றிலும் சட்டவிரோதமானது.

இவ்வாறே மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் "திவிநெகும" சட்டமூலமூடாக மாகாண விவசாய அமைச்சுக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களை பறித்ததும், தற்போதைய ஆட்சியாளர்கள் ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்குதல் எனும் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மாகாணங்களுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களைப் பறிக்க முற்பட்டிருப்பது மாகும்.

புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதனூடாக அதிகாரங்களைப் பகிர்ந்து இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் சமனாக வாழலாம் என்ற கருத்தியலுக்கு தற்போதைய அரசு முரணாகச் செயற்படுகிறது என்பதற்கு சான்று என்பது திண்ணம்- என்றார். (ப-110)

# அதிகார அதிகரிப்பைக் கேட்க இருப்பதையும் பிடுங்குகிறது அரசு

## முன்னாள் எம்.பி சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 18

வட மாகாண சபையின் கீழுள்ள, மாவட்ட பொது மருத்துவமனைகளை அமைச்சரவைத் தீர்மானத்தின்படி மத்திய அரசின் கீழ் கொண்டு வர முற்படும் செயலானது முற்றிலும் தவறாகும். இது அதிகாரப் பரவலாக்குத்துக்கு எதிரானது என்பதோடு உலக யதார்த்தத்துக்கும் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் நெருக்கடியை ஏற்படுத்துவதாகும். ஆகவே இந்த முயற்சியை அரசு கை விட வேண்டும் என் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணும் வகையில் அதிகாரப் பரவலாக்கம் பற்றியும் 13 பிளஸ் பற்றியும் பேசுக்கொண்டிருகின்ற வேளையில் 13ஆவது அரசமைப்பின் மூலமாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்துக்குட்பட்ட வளங்களையும் அதிகாரங்களையும் மீளப் பெறுவது தவறானதாகும். வழங்கப்பட்ட அதிகாரங்களிலிருந்து காலத்துக்குக் காலம் சிலவற்றை மீளப்பெற்றுக்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. குறித்த மருத்துவமனைகளை மத்திய அரசு தனது நிதியூட்டத்தின் கீழ் மாகாணசபைகளுடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். அதுவே சிறந்த வழியாகும். நாட்டின் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் எனில் அதிகாரப் பரவலாக்கம் அவசியமாகும். ஆனால் தற்போது இடம் பெறுகின்ற சம்பவங்கள்

அதற்கு மாறானதாகக் காணப்படுகின்றன. இதனை நாம் கண்டிக்கிறோம். 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்கள் இன்று வரை மாகாணங்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் கல்வி, சுகாதாரம் போன்ற விடயத்திலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பலவீனப்படுத்தப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. மேலும் 13ஆவது அரசமைப்பு மூலம் வழங்கப்பட்ட அதிகாரம் ஒன்றை மத்திய அரசு மீளப் பெறவேண்டுமாயின் நாட்டில் உள்ள அனைத்து மாகாண சபைகளின் அனுமதி அல்லது அனைத்து மாகாண ஆளுநர்களின் அனுமதி பெறப்படல் வேண்டும். எனவே தற்போது மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபைகள் இன்மையால் ஆளுநர்களுடைய அனுமதியே முக்கியமானது. ஆகவே வடக்கு மாகாண ஆளுநர் இந்த விடயத்தில் இனத்தின் நலன் சார்ந்த தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும் - என்றார். (ப-214)

### தனியாருடைய நிலத்தில்

# அரசு அமைத்த மாளிகையை குத்தகைக்கு விடவேமுடியாது

## வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் கஜதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

ஜனநாயக நாட்டிலே தனியாருக்குச் சொந்தமான காணிகளில் அரசு மாளிகையை அமைத்து அதனைக் குத்தகைக்கு விடுவது என்பதை ஒருபோதும் ஏற்கமுடியாது என்று வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கீரிமலையில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகை குத்தகைக்கு விடப்படப்படவுள்ளது என்று நாம் அறிகின்றோம். ஒரு ஜனநாயக நாட்டில் தனியாருக்குச் சொந்தமான 100 பரப்பளவுக்கு மேற்பட்ட காணிகளை அரசு வெளிநபர்களுக்கு இந்தக் கட்டடத்தை குத்தகைக்கு விடுவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது . வடக்கு மாகாண்சபை நடைமுறையில் இருந்தபோது, வடக்கு மாகாண சபை பராமரிக்க ஒப்படைக்குமாறு தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அப்போது இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அப்போதிருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் அனுப்பியிருந்தார். எனினும் எம்மிடம் அது வழங்கப்படவில்லை. அதைப் பெற்றிருக்க நாம் அன்று சில அழுத்தங்களை வழங்கியிருக்கலாமோ என்று தற்போது யோசிக்கிறோம்.

மக்களுக்குச் சொந்தமான காணிகளை விட வேண்டிய தேவையுள்ள நிலையிலே இப்படியான செயற்பாடுகள் துன்பத்தில் உள்ள மக்களை மேலும் துன்பத்தில் தள்ளுவதாகவே அமையும். இவ்விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றுசேர்ந்து ஒரு தீர்க்கமான முடிவை நாம் எடுப்போம் - என்றார். (ப-20)



# அரசுக்குள் பாரபட்சமான முறையிலேயே பங்காளிக்கட்சிகள் நடத்தப்படுகின்றன

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 18

ஆளுங்கட்சியின் கூட்டணிக்குள் இருந்தாலும் பாரபட்சமான முறையிலேயே பங்காளிக் கட்சிகள் வழிநடத்தப்படுகின்றன. எவ்வித கலந்துரையாடல்களுக்கோ தீர்மானங்களை எடுக்கும் சந்தர்ப்பங்களிலோ ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனவே அரசின்மீது நம்பிக்கை இழந்த நிலையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளது என்று அந்தக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.

அரசுக்குள் தற்போது எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து வினவியபோது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஆகியோர் [illegible] கள் [illegible] எரிபொருள் விலை அதிகரிப்பு விடயத்துக்குப் பொறுப்பான உதயகம்மன்பில பதவி விலக வேண்டுமெனில், உரம் தொடர்பில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு பொறுப்பேற்று அதனுடன் தொடர்புடைய அமைச்சர் பதவி விலக வேண்டும். அதேபோன்று பேர்ள் கப்பல் விவகாரத்தில் துறைமுக அமைச்சரும், கொவிட் தொற்றால் கல்வித்துறையில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு பொறுப்பேற்று கல்வி அமைச்சரும் என சகலரும் பதவி விலக வேண்டிய நிலைமையே தற்போது காணப்படுகின்றது.

நாட்டில் இன்று பிரச்சினை அற்ற துறை எது? எனவே ஒவ்வொருவர் மீது பொறுப்பை சுமத்தி நாட்டை நிர்வகிக்க முடியாது. எரிபொருள் விலை குறித்து கருத்து வெளியிட்டுள்ள சாகர காரியவசம், ஏன் விவசாயிகளின் உரப் பிரச்சினை [illegible] தொடர்பில் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை? பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக அரசியல் விளையாட்டொன்றுக்கு இவர்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதார பிரச்சினைகளே அரசியல் முரண்பாடு களாகியுள்ளன. கொவிட் தொற்றின் காரணமாக மாத்திரமே மக்கள் வீதிகளில் இறங்காமலுள்ளனர். எதிர்வரும் காலங்களில் எவ்வாறான நிலைமை ஏற்படும் கூறுவது கடினம்.

உதய கம்மன்பில கூறியதைப் போன்று அரசுக்குள்ளேயே என்று அதனை சீரழிப்பதற்கான எதிரிகள் உள்ளனர் என்பது உண்மை. ஆனால் இதன் ஊடாக அவர் சுதந்திரக் கட்சியை சாடவில்லை.

காரணம் எமக்கும் அரசுடன் அதிருப்தியே காணப்படுகிறது. கூட்டணி ரீதியாக எவ்வித பேச்சுகளும் முன்னெடுக்கப்படுவதில்லை. எனவே தற்போது ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மேலும் தீவிரமடையக்கூடும்- என்றார். (து-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவிஸ் நிலையத்தின் கழிவு நீரால் குடிதண்ணீர் கிணற்றில் எண்ணெய்க் கசிவு

## நாவற்குழியில் மக்கள் அந்தரிப்பு

கொடிகாமம், ஜுன்18

**யாழ்ப்பாணம் கந்தர்மடம் பிரதான வீதியில் உள்ள சேவிஸ் நிலையம் ஒன்றிலிருந்து பெறப்படும் கழிவு நீர், நாவற்குழிப் பகுதியில் உள்ள காணிகளில் விடப்படுவதால், அப்பகுதியில் உள்ள குடிதண்ணீர்க் கிணறுகள் மற்றும் நிலங்கள் மாசுபடுவது சம்பந்தமாக சகல திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவித்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என நாவற்குழி கிராம மக்கள் சுட்டிக்காட்டினர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமான ஜே/294 கிராம அலுவலர் பிரிவில் உள்ள குடிதண்ணீர் கிணற்றை ஜே/294 மற்றும் ஜே/295 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கடந்த 60 வருடங்களுக்கு மேலாகப் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது யாழ்.கந்தர்மடம் பிரதான வீதியில் இருக்கும் சேவிஸ் ஸ்ரேசனில் இருந்து கழிவு நீரைக் கொண்டுவந்து, குறித்த ஜே/294 கிராம அலுவலர் பிரிவில் உள்ள சேவிஸ் ஸ்ரேசன் உரிமையாளரின் சொந்தக் காணி தவிர்ந்த ஏனைய காணிகளுக்குள்ளும், அயலில் இருந்த பாவனையற்ற கிணற்றினுள்ளேயும் பௌசர் மூலம் ஊற்றியதால் 160 மீற்றர் தூரத்தில் உள்ள குடிதண்ணீர் கிணற்றில் எண்ணெய்க்கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தக் கிணற்றைப் பயன்படுத்தும் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிதண்ணீர் இன்றிப் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிய கடிதத்தின் பிரதி ஜனாதிபதி, ஆளுநர், யாழ் மாவட்டச் செயலர், தென்மராட்சி பிரதேச செயலர், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர், செயலாளர், சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர், மற்றும், சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அனுப்பட்டிருந்தும் இதுவரை எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் கிணற்றைப் பார்வையிட்டு சென்றனர். எனினும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வரும் ஜுலை 12ஆம் திகதியன்று சுற்றுச்சூழல் அதிகாரசபையால் குறித்த நபருக்கு வழங்கப்பட்ட அனுமதி நிறைவடைகிறது. மீண்டும் அனுமதி பெற்று சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை ஊற்றுவதற்கு முயற்சி செய்கின்றார். சுன்னாகத்தில் குடி தண்ணீர்க் கிணறுகளுக்கு ஏற்பட்ட நிலை வருமாயின், நாவற்குழி மக்கள் குடிதண்ணீருக்கு எங்கே போவது. ஜனாதிபதியின் பணிப்பின் பிரகாரம் நன்னீர் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வேளையில் 60 வருடங்களுக்கு மேலாக பாவிக்கப்படும் குடிதண்ணீர்க் கிணறு மாசடைவதற்கு அரச அதிகாரிகள் உடந்தையா? என கேள்வி எழுப்புகின்றனர். இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளரிடம் தொடர்பு கொண்ட போது;
தற்போதைய கொவிட் -19 பயணத் தடை சூழ்நிலையில் அத்தியாவசிய சேவைகள் செய்வதற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது. நாவற்குழி பிரதேசத்தில் சேவிஸ் நிலைய கழிவு நீரை ஊற்றுவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை தான் அனுமதி வழங்கியுள்ளது. அவர்களுக்கு எதிராக பிரதேச சபை எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது- என்றார். (ப-159)



# மகாதேவ குருக்களுக்கு சாதனையாளர் விருது

இணுவில்,ஜுன் 18
இணுவில் தர்மசாஸ்தா குருகுலம் மூலம் பல நூற்றுக்கணக்கான குருமார்களை உருவாக்கி பெரும் பணியாற்றி வரும் மகாதேவக்குருக்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
தமிழகத்தின் மயிலாடுதுறையை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சிவபுரம் குளோபல் சிவாகம அகாதமி நிறுவன ஆண்டு விழா உலகளாவிய சிவாச்சார்யர்களின் இணையவழிப் பெருவிழாவாக கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 3 நாள்கள் நடைபெற்றது.
இதன்போது தமிழகம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த ஏழு பெரும் சிவாச்சார்யர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
இதன்போதே இலங்கையைச் சேர்ந்த மகாதேவா குருக்களுக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. (ஐ)

# நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வேலைகளுக்கும் தடையில்லை

## முல்லை. பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு. ஜுன் 18
முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்கள வேலைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார்.
பயணக் கட்டுப்பாட்டு காலத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. குறிப்பாக உலக வங்கியின் வேலைத் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் அந்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இதில் தடைகள் ஏற்படுத்தப்பட முடியாது.
மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான நீர் விநியோகம் தொடர்ந்து நடைபெறுகின்றது. திட்டமிடப்பட்டபடி குளங்களின் முக்கிய சீரமைப்பு வேலைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்- என்றார். (ப-13)

# பின்தங்கிய குடும்பங்களுக்கு கைதடியில் பல்வேறு உதவிகள்

கைதடி,ஜுன் 18
பொருளாதார ரீதியில் பின்தங்கிய கைதடியைச் சேர்ந்த குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. மாணவர்கள் 7 பேருக்கு சைக்கிள்களும், சுயதொழில் முயற்சியாளர் ஒருவருக்கு நவீன தையல் இயந்திரமும் வழங்கப்பட்டன. இதேவேளை நவபுரம் பகுதியில் குறைவீடாக காணப்பட்ட ஒரு வீட்டை முழுமையாக சீரமைக்க ரூபா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.
அத்துடன் இரு வீடுகளுக்கான குடிதண்ணீர்த் தேவை கருதி நிரந்தர குடிதண்ணீர் திட்டங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இந்த உதவிகள் அனைத்தும் பிரிட்டனில் உள்ள சிவசுமத்திரனால் வழங்கப்பட்டன. சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி.நி. கலைவாணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் கைதடி கிழக்கைச் சேர்ந்த வே.விசுவநாதர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-159)







# மடு திருத்தல ஆடித் திருவிழா: முன்னாயத்தக் கலந்துரையாடல்

மன்னார், ஜுன் 18
மன்னார் மடு திருத்தலத்தில் ஆடித் திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி இடம் பெறவுள்ள நிலையில் திருவிழாவுக்கான முன்னேற்பாடு கள் குறித்த கலந்தாய்வு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெற்றது.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றின் காரணமாக மடு திருவிழா வழமைபோல் இடம்பெற்றாலும் யாத்திரிகர்கள் செல்வது தவிர்க்கப்பட்டுள்ள நிலையில், திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள், சுகாதார நடைமுறைகள் மற்றும் ஏனைய விடயங்கள் ஆகியவை குறித்து கலந்துரையாடப்பட்டன. கலந்துரையாடலில் உரிய திணைக்களங்களுக்கான பொறுப்புக்களும் வழங்கப்பட்டன.
கலந்துரையாடலில், மன்னார் மறைமாவட்ட ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஏ.விக்டர் சோசை அடிகளார், மடுத்திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி. வினோதன், உதவி மாவட்டச் செயலர், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன். ஆடைத் தொழிற்சாலையிலும் 10 பேருக்கு கொரோனாத் தொற்று

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

**மன்னார், ஜூன் 18**

**மன்னாரில் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றுகின்ற 10 நபர்கள் உட்பட 15 நபர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 572 ஆக அதிகரித்துள்ளது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனை முடிவுகளின் படி நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேலும் 15 நபர்கள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் எமில் நகர், சாந்திபுரம் மற்றும் தாராபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மேலும் மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் ஒவ்வொரு வாரமும் மேற்கொள்ளப்படுகின்ற அன்டிஜென் பரிசோதனைகளின்போது 10 நபர்களுக்கு தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்கள் சின்னக்கடை, சாந்திபுரம், எமில் நகர், பேசாலை, விடத்தல் தீவு, பரப்புக்கடந்தான் மற்றும் பண்டிவிருச்சான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் 6 பேர் பெண்களாகவும் 4 பேர் ஆண்களாகவும் உள்ளனர். பெண்கள் தாராபுரத்தில் அமைந்துள்ள இடை நிலை சிகிச்சை நிலையத்துக்கும், ஆண்கள் வவுனியா இடை நிலை சிகிச்சை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள துரித செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். மக்கள் சுகாதார வழி முறைகளை உரிய முறையில் கடைப்பிடித்து தொற்றுக்கு உள்ளாகாது உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள் - என்றார். (ப-56)



# இளைஞர்களால் கசிப்பு வேட்டை

வவுனியா,ஜூன் 18

வவுனியா பனிச்சங்குளம் கிராமத்தில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் இளைஞர்களால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில் ஒரு பெரல் கோடா கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

பாலமோட்டை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்குளம் கிராமத்தில் தொடர்ச்சியாக கசிப்பு விற்பனை நடைபெற்றுவருகிறது.

இந்த நிலையில் இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பாலமோட்டையைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்றுகூடி கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டுள்ளனர். (ஐ-110)

# சேதனப்பசளை உற்பத்திசெய்ய ஆர்வமுடையோர் முன்வாருங்கள்

## மன்னார் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வேண்டுகோள்

மன்னார், ஜூன் 18

விவசாயிகள் சேதனப்பசளைகளைக் கொண்டே தங்கள் விவசாயச்செய்கையை முன்னெடுக்க வேண்டும் என்ற நிலையில் மன்னார் மாவட்டத்தில் சேதனப் பசளையை உற்பத்திசெய்ய ஆர்வம் உள்ளோர் உடன் பதிவுசெய்ய முன்வர வேண்டும் என மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.மரின்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

விவசாயிகள் தங்கள் பயிர்ச்செய்கைக்கு இரசாயன உரங்களைத் தவிர்த்து சேதன உரங்களைக் கொண்டு பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும் என அரசு அறிவித்துள்ளது இதற்கமைய நாடு முழுவதும் சேதனப்பசளையை உற்பத்திசெய்வோர் தங்கள் பெயர் விவரங்களை கமநல அபிவிருத்தி திணைக்களங்களில் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் நாளை வரை பதிவுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் மாவட்ட கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம் இதற்கான வேலைத் திட்டத்தை கமநல சேவை மத்திய நிலையத்துடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றது. இதுவரை மன்னார் மாவட்டத்தில் 90 நபர்களே சேதனப்பசளையை உற்பத்திசெய்வதற்காக பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை சேதனப் பசளையை உற்பத்திசெய்வதற்கான சகல வசதிகளும் காணப்படுவதால் தற்பொழுது பதிவுசெய்திருப்போர் தொகையை நோக்கும்போது, இவர்களால் உற்பத்திசெய்யப்படும் சேதனப்பசளைகள் மாவட்ட விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்பவையாக அமையாது. தற்பொழுது கொரோனா காரணமாக பயணத்தடைகள் அமுலில் இருப்பதால் இதில் ஆர்வம் உடையோர் மன்னார் மாவட்டத்திலுள்ள கமநல சேவைகள் நிலையங்களுக்குச் சென்று தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியாது இருக்குமானால் இவற்றை இலகுபடுத்தும் முகமாக கூகுல் மூலம் தொடர்புகளை ஏற்படுத்தி பதிவுகளை மேற்கொள்ள முடியும் - என்றார். (ப-60)



# கொவிட் பாதுகாப்பு பொருள்கள் கையளிப்பு

கிளிநொச்சி,ஜூன் 18

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தால் ஒரு தொகுதி கொவிட் பாதுகாப்பு பொருள்கள் கண்டாவளை பிரதேச செயலரிடம் நேற்று கையளிக்கப்பட்டன.

முகக்கவசங்கள், கொவிட் தொற்று நீக்கும் திரவங்கள் உள்ளிட்ட ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் இதன்போது வழங்கப்பட்டன. கிராம மட்ட இடர் முகாமைத்துவக் குழுக்களின் பாவனைக்காக குறித்த பொருள்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-113)

# பொலிஸ் விசாரணைகளில் வெளிவந்த ஒன்பது ஆடுகள்

கிளிநொச்சி, ஜூன் 18

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மூவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், 9 ஆடுகள் திருடியமையும் தெரியவந்துள்ளது. அவர்களால் திருடப்பட்ட 9 ஆடுகள் மற்றும் வெவ்வேறு பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. கிளிநொச்சி பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த 9 ஆடுகளும் பன்னங்கண்டி, பெரிய பரந்தன், செல்வாநகர், ஜெயந்திநகர் மற்றும் திருநகர் ஆகிய பகுதிகளில் திருடப்பட்டன என்று விசாரணைகளில் சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் குறித்த பகுதிகளிலிருந்து ஆடுகள் திருடப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கவில்லை என்று தெரிவித்த பொலிஸார், குறித்த திருட்டு சம்பவம் தொடர்பில், ஆடுகளை அடையாளப்படுத்தும் வகையில் அவற்றின் உரிமையாளர்கள் முறைப்பாடுசெய்யுமாறு கேட்டுக்கொண்டனர். (ப-6)

# முல்லை. பொது மருத்துவமனையின் சாரதிகளுக்கு விடுதி வசதி இல்லை

## கரைதுறைப்பற்று சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூன் 18

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில், சாரதிகளுக்கான விடுதி அமைக்கப்படவில்லை என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் நான்கு நிரந்தர சாரதிகள் உள்ளனர். இவர்களுக்கான விடுதி அமைக்கப்பட வேண்டும் என கடந்த பல வருடங்களாக வடமாகாண சுகாதார அமைச்சுக்கு மருத்துவமனை நிர்வாகத்தால் கோரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டன. இவ் ஆண்டும் அனுப்பப்பட்ட கோரிக்கைக் கடிதம் நிராகரிக்கப்பட்டுள்ளது. சாரதிகள் நித்திரை விழித்து அவசர நோயாளர்களை பல்வேறு மருத்துவமனைகளுக்குக் கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதித்து விட்டு மாவட்டப் பொது மருத்துவமனைக்குத் திரும்பினால் ஓய்வு எடுப்பதற்கு விடுதி வசதிகள் இல்லை. நீண்ட நேரம் நித்திரை விழித்து பணிசெய்துவிட்டு ஓய்வு எடுக்க முடியாத நிலையில் சாரதிகள் உள்ளனர்.

இந்நிலையில் வடமாகாண சுகாதார அமைச்சுக்கு பல ஆண்டுகளாக சாரதி விடுதி வசதிகள் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதனால் சாரதிகளுக்கான ஓய்வு விடுதி அமைக்கும் பணிகள் பல வருடங்களாக நடைபெறாத நிலைமையில் காணப்படுகின்றன. இவ் விடயம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும். உயிர்காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் சாரதிகளுக்கு ஓய்வு விடுதி அமைக்கப்படுவதன் மூலம் சாரதிகளின் நலன் பேணப்படும் - என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(நேற்றைய தொடர்ச்சி...)

# யாழ்.குடாநாட்டில் டெங்கு நோய் பரவலில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளின் தாக்கம்

சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரன்,
கோகிலா சிவபாலகிருஷ்ணன்
விலங்கியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்




முடக்கத்தால் யாழ்.குடாநாட்டில் டெங்குப் பரவலிலும் சாதகமான விளைவு ஏற்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் கொரோனாத் தொற்றுக்கு முன்னர், யாழ் மாவட்டத்தில் 8ஆயிரத்து 261 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 2020 ஆம் ஆண்டு, கொரோனாத் தொற்றுக் காலத்தில் பதிவாகிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 157 ஆகவும், 2021 இன் முதல் நான்கு மாதங்கள் வரை பதிவாகிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 94 ஆகவும் காணப்படுகின்றது (படம் 2). இங்கு ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், 2020 தொடக்கம் ஏப்ரல், 2021 வரையான காலப் பகுதியில் பருவ மழைக்காலங்களில் (செப்ரெம்பர் -பெப்ரவரி) கூட குறைந்த அளவு டெங்கு நோய் பரவலே நிகழ்ந்துள்ளது (படம் 2). எனவே இங்கு பதிவாகியுள்ள டெங்கு நோயாளிகளின் தரவுகள், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அமுலாக்கப்பட்ட முடக்கம், பயணத்தடை மற்றும் சமூக இடைவெளி பேணும் செயற்பாடுகள் டெங்கு வைரஸின் பரவலில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

இருப்பினும், டெங்கு நோயாயளர் குறைவடைந்ததமைக்கு கொவிட்-19 தொற்று மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக எழுந்துள்ள பிற சாத்தியமான பங்களிப்புக் காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். கொவிட் 19 தொற்று மற்றும் டெங்கு நோய் இரண்டும் பொதுவான ஆரம்பகால மருத்துவ அறிகுறிகளை வெளிப்படுத்துவதால் நோயை வேறுபடுத்தியறிதலில் சிக்கலை ஏற்படுத்துகின்றன. அத்துடன் கொவிட் -19 நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டு, தனிமைப் படுத்தப்படலாம் என்ற பயத்தில் லேசான டெங்கு தொற்று உள்ளவர்கள் மருத்துவ சிகிச்சை பெற தயங்குவதும் ஒரு காரணமாக இருக்கலாம். வேறுபட்ட கொவிட் -19 கட்டுப்பாடுகள் காரணமாக நோயாளர்கள் மருத்துவ சிகிச்சையை உடன் அணுகலில் சிக்கலேற்பட்டுள்ளமை (டெங்கு நோய் பரிசோதனை மற்றும் பதிவு செய்தல்) பதிவுசெய்யப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவதற்கு மற்றொரு சாத்தியமான காரணியாக அமைகின்றது.

## யாழ் குடாநாட்டில் குறைந்துள்ள டெங்கு நோய் பரவலும் அதுசார் நுண்ணறிவும்

உரிமம் பெற்ற தடுப்பூசி இல்லாத நிலையில், டெங்கு நோய் பரவுவதைக் குறைப்பதற்கான ஒரே நடவடிக்கை நுளம்பு நோய்க்காவிகளின் கட்டுப்பாடு மட்டுமே. டெங்கு நுளம்புகளின் பரவலும் டெங்கு கடத்துகை வீதமும், காலநிலை, சனத்தொகை அடர்த்தி, மக்களின் இயக்கம், மனித சூழலில் நுளம்பு குடம்பிகளின் வளர்ச்சிக்கான வாழ்விடங்கள் கிடைத்தல் மற்றும் பயன்பாட்டில் உள்ள நுளம்புக்காவிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல காரணிகளில் தங்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் பரவல் பருவமழை காலம் மற்றும் ஈடிஸ் நுளம்புகளின் உயிரியல் தன்மை ஆகியவற்றுடன் தொடர்புடையது.




படம்-2: 2017- மார்ச் 2021 காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் பதிவாகியுள்ள மாதாந்த மழை வீழ்ச்சி மற்றும் டெங்கு தொற்றாளர்கள்

சமீபத்திய காலங்களில், யாழ் குடாநாட்டில் உப்பு மற்றும் மாசுபட்ட நீர்ச் சூழலில் டெங்கு நுளம்பு குடம்பிகளின் வளர்ச்சி ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அதிகரித்த டெங்கு நோய் கடத்துகை மற்றும் பரவல் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொவிட் தொற்றுக் காலத்தில் மக்களின் இயக்கம் மற்றும் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறைந்துள்ள சமயத்தில் யாழ் குடாநாட்டில் குறைந்துவிட்ட டெங்கு நோய் பரவலானது தொற்றுநோயியலை புரிந்து கொள்வ தற்கான மேலதிக நுண்ணறிவுகளை வழங்கியுள்ளது.

## டெங்குத் தொற்று மற்றும் பரவுதலுக்கான மையப்புள்ளி

பொது முடக்கமானது மக்களின் நடமாட்டம் மற்றும் போக்குவரத்தை தடைசெய்யும் என்பதால், டெங்குப் நோய் பரவல் அந்த அந்த இடங்களில் பகிரப்பட்டதா (ஒரே வீடுகளில் வதிப்போர் / வீடுகளுக்கு வருகை தருவோர்) அல்லது தொலைதூர பகிர்வு (பாடசாலை, வேலை மற்றும் பயணம்) மூலம் நிகழ்ந்ததா என்பதை மதிப்பிடுவதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கியுள்ளது. திணிக்கப்பட்ட முடக்கம் மற்றும் தடைசெய்யப்பட்ட மக்களின் பயணம் ஆகியவை பொதுமக்களை தங்கள் வீடுகளில் அடைந்திருக்கச் செய்துள்ளன. பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன, அரசாங்க நிறுவனங்கள் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களுடன் இயங்குகின்றன, பொதுக்கூட்டங்களுக்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் மக்கள் அடர்த்தியாக வாழ்கின்ற மற்றும் டெங்கு நோய் பரவும் பாரம்பரிய இடமாக விளங்கும் மேற்கு மாகாணத்துக்கான பயணம் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் யாழ் குடாவில் டெங்கு நோய் பரவுதலானது உள்ளூர் கொத்தணிகளுடன் அல்லது ஒரே குடும்ப உறுப்பினர்களுக்குள் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதை .கூட்டாக சுட்டிக்காட்டுகின்றன. ஈடிஸ் நோய்க்காவி நுளம்புகளின் இருக்கை ஆண்டு முழுவதும் பதிவாகியிருப்பதோடு, யாழ் குடாநாட்டில் பல்வேறு வகையான நீர் வாழ்விடங்களில் ஈடிஸ் நுளம்புகளின் குறைவிருத்தி பருவங்களின் பரவல் உள்ள போதும் இங்கு டெங்கு வைரஸின் பரவுதல் எங்கிருந்து ஆரம்பிக்கின்றது என்பது தெளிவாக அறியப்படாத ஒன்றாகவே இருந்தது. இந்நிலையில் கொவிட்டுக்கு பின்னான தற்போதைய நிலைமைகள் யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் பரவுதல் உள்ளூரில் பகிரப்பட்டதை விட தொலைதூர பகிர்வு (பாடசாலை, வேலை மற்றும் பிரயாணம்) மூலமே நிகழ்ந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

## டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

யாழ். குடாநாட்டில் டெங்கு நுளம்பினங்களின் தொடர்ச்சியான பரவல் காணப்படும்போதும் முடக்கல் காலத்தில் சுகாதார அதிகாரிகளால் வீடு வீடாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத சமயத்தில் குறைவடைந்துள்ள டெங்கு நோய் பரவும் வீதமானது யாழில் டெங்கு நோய்த் தாக்கமானது தொலைதூரப் பகிர்வு மூலமே நிகழ்கின்றது. முக்கியமாக டெங்கு ஆபத்து பகுதிகளுக்குச் செல்லும் மற்றும் வரும் மக்களின் இயக்கத்துடன் தொடர்புடையது என்பதை பரிந்துரைக்கின்றது. இருப்பினும் யாழ். குடாவில் டெங்கு நுளம்பு காவிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பிரதானமாக இருக்கும் முடக்கத்துக்கு பின்னான காலத்தில் டெங்கு நோய் பரவும் முறை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

## யாழ்.குடாநாட்டில் குறைந்துள்ள டெங்கு நோய் பரவலை தொடர்ந்தும் தக்கவைத்தல்

யாழ் குடாநாட்டில் தற்போது காணப்படும் குறைந்த அளவிலான டெங்கு நோய் பரவும் நிலையை கொவிட்-19 அல்லது முடக்கலுக்கு பிந்தைய காலங்களில் கூட தக்க வைக்க உரிய சுகாதார அதிகாரிகள் தற்போது உள்ள நிலைமையை சரியான முறையில் ஆய்வுசெய்ய வேண்டும். முடக்கம், பயண கட்டுப்பாடு மற்றும் தடைசெய்யப்பட்ட பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றின் விளைவாக இங்கு டெங்கு நோய் பரவுதல் குறைவாக இருக்கின்றது. ஆனால், கொவிட்-19 தொற்றுக்கு பிந்தைய காலகட்டத்தில் இந்த நடவடிக்கைகளைத் தொடர முடியாது, டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டையே பிரதானமாக செயற்படுத்த முடியும். இருப்பினும் மறுபுறம், புதிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மக்கள் பயணத்தை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், தொலைதூர பகிர்வு பரிமாற்றத்துக்கான காரணிகளை இல்லாமல் செய்தல் அல்லது கட்டுப்படுத்துதல் தொடர்பாகவும் பரிந்துரைக்கப்படலாம். உதாரணமாக டெங்கு நோய் பரவல் அதிகமாக உள்ள காலங்களில் நாட்டின் பிற பகுதிகளில் இருந்து டெங்கு ஆபத்து பகுதிகளுக்கு மக்கள் செல்வதற்கும் வெளியேறுவதற்கும் கட்டுப்பாடு விதித்தல், டெங்கு தொற்றாளர்கள் கண்

நோய் பரவும் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் போன்ற பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களை ஓரளவு அல்லது முழுமையாக மூடுதல். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் டெங்கு நோய் பரவுதல் முன்னர் காணப்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் இல்லாதொழிக்கப்பட்டால், உள்ளூரில் டெங்கு நோய் பரவலைத் தடுத்தல் மற்றும் தக்கவைத்தல் பற்றிய நுண்ணறிவை இவை வழங்கும்.

## பரிந்துரைகள்

கொவிட்19 தொற்று பரவலாலும் அதனைத் தொடர்ந்து அமுலாக்கப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாகவும் யாழ். குடாநாட்டில் டெங்கு நோய் பரவல் குறைவடைந்திருந்தாலும், டெங்கு நோய் பரவுவதில் கொவிட்19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகளை புரிந்துகொள்ள மேலதிக ஆய்வுகள் தேவைப்படுகின்றன. அதுவரை நுளம்பு நோய்க் காவிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் பங்கேற்புடன் பலப்படுத்தப்பட வேண்டும். யாழ் மாவட்டத்தில் சுகாதாரத் துறையின் பெரும் பகுதியினர் கொவிட்19 தடுப்பு தொடர்பான வேலைத்திட்டங்களில் ஈடுபட அறிவுறுத்தப்பட்டிருப்பதால் சுகாதார அதிகாரிகளின் வீடுகளுக்கான மேற்பார்வை மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். எனவே நுளம்பு பெருக்கத்தை தடுக்கும் நடைமுறைகளை சுயமாகப் பின்பற்ற பொதுமக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அத்துடன் டெங்கு நுளம்புகளின் குறைவளர்ச்சி பருவங்கள் உவர் நீர் மற்றும் மாசுபட்ட நீரில் வளர்ச்சியடையக் கூடும் என்பதால்அவற்றின் பெருக்கத்தை கட்டுப்படுத்த பின்வரும் விடயங்களில் சுகாதார அதிகாரிகள் கவனம் செலுத்துவதோடு பொதுமக்கள் மத்தியிலும் அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

- (i) கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் இடங்கள், வாழ்விடங்கள் மற்றும் நேரங்களை அடையாளம் காணுதல்.
- (ii) கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான தேவையை சுட்டிக்காட்டுதல்.
- (iii) உவர் நீர் வாழ்விடங்கள், மேற்பரப்பு வடிகால்கள் மற்றும் வீட்டு கிணறுகளுக்கு நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விரிவாக்கப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுதல்.
- (iv) திறந்த மேற்பரப்பு வடிகால்களை நிலத்தடி வடிகால்களாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்துதல்.
- (v) யாழ். குடாநாட்டில் நுளம்பு குடம்பிகளை திறம்பட அகற்றுவதாக முன்னர் நிரூபிக்கப்பட்ட குடம்பி யுண்ணும் மீன்களை நன்னீர் மற்றும் உவர்நீர் வீட்டுக் கிணறுகளில் வளர்ப்பதன் அவசியத்தை வலுவூட்டுதல்.
- (vi) வீட்டுக் கிணறுகள் மற்றும் நீர் சேமிப்பு தொட்டிகளுக்கு நுளம்பு தடுப்பு வலைகளை போடவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துதல்.
- (vii) ஈடிஸ் நுளம்பு நோய்க் காவிகளின் நிறையுடலி மற்றும் குறை வளர்ச்சிப் பருவங்கள் பற்றிய கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுதல்.

## முடிவுரை

இலங்கையில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்ட முடக்கம், அதனுடன் தொடர்புடைய பயண மற்றும் ஒன்றுகூடலுக்கான கட்டுப்பாடுகளின் விளைவாக யாழ் குடாநாட்டில் டெங்கு நோய் பரவல் மிகக் குறைவடைந்திருக்கின்றது. இவ்வாறு குறைந்துள்ள டெங்கு நோய் பரவலில் கொவிட்-19 தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு மேலதிக ஆய்வுகள் தேவை. இவை கொவிட்-19 தொற்றிலிருந்து மீளும் காலங்களில் டெங்கு நோய் கட்டுப்பாட்டில் வரும் சவால்களை எதிர்கொள்ள அவசியமானவை. எனவே நுளம்பு நோய்க் காவிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக புதிய டெங்கு கட்டுப்பாட்டு உத்திகளை அடையாளம் காண சுகாதார அதிகாரிகள் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தடையில் நடமாடிய 51 பேருக்கு பி.சி.ஆர்.சோதனை



**சாவகச்சேரி,ஜூன் 18**

**பயணத்தடை வேளையில் சாவகச்சேரி நகரப்பகுதியில் தேவையற்ற வகையில் நடமாடிய 51 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.**

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் இவர்களுக்கு நேற்று எழுமாற்று பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி நகரப்பகுதியில் பயணத்தடை விதிமுறைகளை மீறி தினமும் பெருமளவானோர் நடமாடுகின்றனர் என கிடைத்த தகவலையடுத்து சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போதே 51 பேர் பிடிக்கப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை கைதடி சித்த மருத்துவமனை மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் ஆகியவற்றில் 31 பேருமாக 82 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-9)

# அரசின் 2ஆம் கட்ட நிவாரண உதவிகளை விரைந்து வழங்குக

## முல்லை. மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் முடக்கப்பட்ட பகுதிகளுக்கான இரண்டம் கட்ட நிவாரணக் கொடுப்பனவை வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் 11 கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டு கடந்த 7ஆம் திகதி தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டன.

தொழில் முடக்கத்தால் பல்வேறு குடும்பங்கள் நாளாந்த வருமானம் அற்ற நிலையில் அரசின் உதவியையே நம்பி வாழ்கின்றனர்.

போரால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த நிலையிலும் அங்கவீனர்களான நிலையிலும், வயோதிபர்களாகவும், பிள்ளைகளை தொலைத்த நிலையிலும் வாழ்ந்து வரும் நாங்கள் அரசு பயணத்தடையை விதித்துள்ளதால் நாளாந்தம் கூலிவேலை செய்து குடும்பத்தை பார்த்துக்கொள்ளமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 9 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 6 ஆயிரத்து 460 குடும்பங்களும், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 867 குடும்பங்களுக்குமான அரசின் 10 ஆயிரம் ரூபா நிவாரணப் பொதிகள் வழங்கப்படும் என மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார். இந் நிலையில் முதற்கட்ட 5 ஆயிரம் ரூபா நிவாரணப்பொதி வழங்கப்பட்டுள்ளது. எனவே அடுத்த கட்ட நிவாரணப்பொதியையும் விரைவுபடுத்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். இது தொடர்பில் பிரதேச செயலாளர்களிடம் வினவிய போது;

மக்களுக்கான இராண்டாம் கட்ட நிவாரணப்பொதிகள் கொடுக்கும் நடவடிக்கையில் பொதிகளைத் தயாரப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் அவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படும் - என்றனர். (ப-19)

# வீதியால் சென்ற மூவருக்குத் தொற்று

**சாவகச்சேரி, ஜூன் 18**

வீதியால் சென்றவர்களுக்கு நடத்திய பி.சி.ஆர்.பரிசோதனையில் மூவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் மட்டுவிலில் கடந்த செவ்வாய்க்கிழமை வீதியால் சென்றவர்கள் உள்ளிட்ட 19 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்டனர்.

பரிசோதனையில் அப்பகுதியைச் சேர்ந்த மூவர் மற்றும் வீதியால் சென்ற மூவர் என்று ஆறு பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

மட்டுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று ஏற்பட்டதையடுத்து அவருடன் நேரடித்தொடர்பை பேணியோருக்கு எழுமாற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன்,அவ்வேளையில் வீதியால் சென்றவர்களுக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)



# முழங்காவில் வீதி சீரமைப்பு

**கிளிநொச்சி, ஜூன் 18**

முழங்காவில் செபஸ்தியார்புரம் முதன்மை வீதிக்கான சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று பூநகரி பிரதேச சபையின் முழங்காவில் வட்டார உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட நிதியில் குறித்த வீதி சீரமைக்கப்பட்டு வருகின்றது. இவ்வீதி சீரமைக்கப்படுவதன் மூலம் இரணைமாதாநகர் உள்ளிட்ட முழங்காவில் பிரதேசத்தின் பல கிராம மக்கள் நன்மையடைவார்கள். இதனால் இரணைமாதாநகர் மக்கள் முழங்காவில் நகரத்துக்கு இலகுவாக வருகைதர முடியும். குறிப்பாக முழங்காவில் மகா வித்தியாலயம் மற்றும் முழங்காவில் மருத்துவமனை ஆகிய வற்றுக்கு இலகுவாக சென்றடைய முடியும்- என்றார். (ஐ-13).





# கரையொதுங்கிய கடலாமைகளை கண்டுகொள்ளாத அதிகாரிகள்

**மன்னார், ஜூன் 18**

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கிய கடலாமைகளை மீட்பதற்கு அதிகாரிகள் முன்வரவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு கடற்கரைப் பகுதியில் நேற்றுக்காலை இரண்டு கடலாமைகள் காயங்களுடன் கரையொதுங்கியுள்ளன. அவற்றில் ஒரு கடலாமை உயிரிழந்துள்ளது. மற்றைய கடலாமை உயிருடன் காணப்பட்டது.

குறித்த கடலாமைகள் கரை ஒதுங்கியமை தொடர்பாக கடற்படையினர் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தனர். எனினும் அவற்றை மீட்பதற்கு எவரும் முன்வரவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-56)

# சேதமடைந்த வீதியை சீரமைக்கக் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூன் 18**

முல்லைத்தீவு- தண்ணிமுறிப்பு குளத்துக்குச் செல்லும் வீதி பல காலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் உள்ளிட்டோர் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் வற்றாப்பளை, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, அளம்பில், செம்மலை, தண்ணிரூற்று மற்றும் குமுழமுனை ஆகிய இடங்களில் இருந்து செல்லும் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். குமுழமுனையில் இருந்து 17 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட குறித்த வீதி நீண்ட காலமாக சீரமைக்கப்படாமல் காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் உரங்களை தமது வயல் நிலங்களுக்கு கொண்டுசெல்வதிலும் அறுவடை காலங்களில் அறுவடை இயந்திரங்களை வயலுக்குக் கொண்டுசெல்வதிலும் அறுவடைகளை வீடுகளுக்கு எடுத்துவருவதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மேற்படி வீதியை விரைவாக சீரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய வசதியற்று 2,000 பாடசாலைகள்

## இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 18**

**நாட்டில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இணைய வசதி இல்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொரோனாத் தொற்றால் வீழ்ச்சியடைந்த பாடசாலைக் கல்வியை மேம்படுத்த, தோல்வியுற்ற இணையவழி கல்வி முறையை கைவிட்டு மாற்றுத்திட்டம் தொடர்பான கல்விச் சீர்திருத்தங்களைக் கண்டறிவது தொடர்பான கலந்துரையாடல் கல்வியமைச்சில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் கொரோனாவால் பாடசாலைகள் மூடப்பட்டு, பெரும்பான்மையான மாணவர்கள் ஒரு வருடத்துக்கும் மேலாக கல்வி வாய்ப்புகளை இழந்துள்ள நிலையில், மாற்றுக் கல்விச் செயற்பாடு குறித்து விவாதிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியது.

அத்துடன் பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து முன்கொண்டு செல்வதில் இணையவழி கல்வியின் தோல்வியை தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டின.

கல்வி அமைச்சின் தரவுகளுக்கு அமைய நாட்டில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இணைய வசதி இல்லாதவை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் கணினி கல்வியறிவு விகிதம் 23 வீதமாகும். எனினும் பெருந்தோட்டப் பகுதிகளில் 12 வீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது என்று ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியது.

வீழ்ச்சியடைந்த பாடசாலை கல்வியை மேம்படுத்துவதற்கான ஒரே வழி, இணையவழி கல்வி முறைமையே என்ற எண்ணத்தில் செயற்பட்டமையால், பலர் கல்வியை இழந்துள்ளனர் என்றும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டின.

அதேவேளை கல்வி அமைச்சில் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகக் கற்ற அதிகாரிகளைக் கொண்ட கல்வி தொழில்நுட்பப் பிரிவை நிறுவவும், தொலைக்கல்வியை மேற்கொள்ளவும் இராஜாங்க கல்வி அமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

(எ-4)

# 'ஒன்லைன்' வகுப்புக்கள் தொடர்பில் அரசு பரிசீலனை செய்யவேண்டும்

## சர்வதேச இந்துமத குருபீடாதிபதி வேண்டுகோள்

வவுனியா, ஜூன் 18

ஒன்லைன் வகுப்புக்கள் மாணவர்களுக்கு பல்வேறு தாக்கங்களை உருவாக்கும். எனவே இது தொடர்பில் அரசு சிந்திக்க வேண்டும் என்று சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவபோதம் ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் தெரிவித்தார்.



வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆலய குருமார், ஆலயப்பணிகளைச் செய்பவர்கள், தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் என அனைவரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பாடசாலைகள் இயங்காமையால் மாணவர்களுக்கு பல்வேறு சங்கடங்கள் ஏற்பட்டுள்ளன. ஒன்லைன் மூலமான கற்பித்தல் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இது ஒரு வேதனைக்குரிய விடயம். பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று ஆசிரியர்களூடாகக் கற்பதுபோல் ஒன்லைன் முறைமை வராது. அத்துடன் கையடக்கத் தொலைபேசிகளூடாக பாடங்களை கற்பிக்கும்போது கண் சம்பந்தமான நோய்கள் மற்றும் உளரீதியான பாதிப்புக்கள் ஆகியவை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இது மாணவர்களை மனரீதியாக பாதிப்பதுடன் அவர்களின் எதிர்காலத்தைப் பாதிப்பதாகவும் அமையும்.

இது தொடர்பில் அரசு சிந்திக்க வேண்டும். அத்துடன் ஒன்லைன் முறையில் கற்றுக் கொள்வதற்கு வசதியில்லாத எத்தனையோ ஏழை மாணவர்கள் இருக்கின்றார்கள். பொருண்மியம் நலிவடைந்த பலர் எங்களிடம் உதவிகளைக் கேட்கின்றனர். அந்தவகையில் சில பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்காக கையடக்கத்தொலைபேசிகளை நாம் வழங்கியிருக்கின்றோம் - என்றார்.

(ப-110)

# பல்கலைக்கழக அனுமதிக்கு ஒரு லட்சம் விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 18

பல்கலைக்கழகங்களின் அனுமதிக்காக இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித் துள்ளனர் என்று ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு, இணைய வழியில் விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டிருந்தது.

இணைய வழியில் விண்ணப்பிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ள நிலையில், இதுவரை விண்ணப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்கள், பயணக் கட்டுப்பாடுகள் தளர்ப்பட்டதன் பின்னர் விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(எ-4)

# கல்வி நிலையத்தில் 36 பேருக்குத் தொற்று

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி இயங்கிய தனியார் கல்வி நிலையம் ஒன்றில், முகாமையாளர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட 36 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டுக்கஸ்தோட்டை பொலிஸ் பிரிவில் குறித்த கல்வி நிலையம் செயற்பட்டுள்ளது. அதை அறிந்த சுகாதார அதிகாரிகள் கல்வி நிலையத்தில் இருந்த அனைவரையும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தினர். அவர்களில் 36 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை கல்வி நிலையத்துக்கு அண்மைக்காலமாக வந்து சென்ற ஏனைய மாணவர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 5 மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளைத் திறப்பதற்கான பொறிமுறையை உருவாக்க ஆராய்வு

## கல்வி அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

"பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்கும் முயற்சியில் சிறப்பு மருத்துவர்களுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது" என்று கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வகுப்பறை அடிப்படையிலான கல்விக்கு மாற்று வழி இல்லாததால், பாடசாலைகளை மீண்டும் திறக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றோம். இருப்பினும், மீண்டும் பாடசாலைகளைத் திறப்பது ஒரு முறையான திட்டத்தின் கீழ் இருக்க வேண்டும். அதற்கு முன்னர் ஆசிரியர்களுக்கு தடுப்பூசி போடப்பட வேண்டும். கல்வித்துறைக்குள் உள்ள அனைத்து அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற நிர்வாக ஊழியர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி போடுவதற்கு 2 லட்சத்து 49 ஆயிரத்து 613 தடுப்பூசிகள் தேவையாகவுள்ளன.

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு முன்பு 29 ஆயிரத்து 407 கல்விசாரா ஊழியர்களுக்கும் தடுப்பூசி போடவேண்டும். பாடசாலைகளைத் திறப்பதென்றால், மொத்தம் 2 லட்சத்து 79 ஆயிரத்து 20 கொவிட் 19 தடுப்பூசிகள் தேவை.

நிர்வாக ஊழியர்களுக்கு தடுப்பூசி போடுவது அவர்களை பாடசாலைகளுக்குச் செல்ல ஊக்குவிக்கும். ஒன்லைன் அடிப்படையில் கல்வி கற்பித்தல் முறையைத் தொடர்வதற்குப் பதிலாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வகுப்பறைகளுக்கு அனுப்புவதில் மகிழ்ச்சியடைவார்கள்.


இதேவேளை, மாணவர்களின் போக்குவரத்து வழிமுறைகள் குறித்தும் ஆராய்கின்றோம். - என்றார்.

(த-இ)

# டெங்கு, கொரோனா ஒரே அறிகுறிகளே!

## மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 18



டெங்கு மற்றும் கொரோனாத் தொற்று ஆகியவை ஒரே மாதிரியான நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தக் கூடியவை என்று தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்தை விட இந்த வருடத்தில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், சீரற்ற வானிலையால் எதிர்வரும் சில வாரங்களில் நோயாளர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படக்கூடும்.

இதனால் நோய் அறிகுறிகள் தொடர்பில் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும். தேவையற்ற மருந்துகளைப் பயன்படுத்தாமல் நோய் அறிகுறிகள் தென்படும் முதல் சந்தர்ப்பத்திலேயே மருத்துவர் ஒருவரைச் சந்தித்து ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாட்டின் அனைத்து மருத்துவமனைகளிலும் டெங்குத் தொற்றாளர்களுக்கான சிகிச்சைப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில் வீடு மற்றும் சுற்றுப்புறச் சூழலை சுத்தம்செய்வதும் மக்களின் பொறுப்பு.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தற்போது கொவிட் ஒழிப்பு நவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால், டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் தொடர்பில் முழுமையாக கவனம் செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே மக்களே அவதானத்துடன் செயற்பட வேண்டும் - என்றார்.

(எ-4)

# மறவன்புலவு சச்சியிடம் ரி.ஐ.டியினர் விசாரணை!

யாழ்ப்பாணம், ஜூன் 18

இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தனிடம் கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாதத் தடைப் புலனாய்வுப் பிரிவினர் (ரிஐடி) நேற்று வியாழக்கிழமை மாலை இரண்டு மணிநேரம் விசாரணைமேற்கொண்டனர். தயாரித்துக் கொண்டு வந்திருந்த வினாக்கொத்து ஒன்றைக் கொண்டு 22க்கும் கூடுதலான வினாக்களைத் தொடுத்தனர். விடைகளைப் பதிந்து சென்றனர். சிவசேனை அமைப்புக்கும், விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் தொடர்பு இருக்கிறதா? என்ற கோணத்திலும் அவர்களின் விசாரணை அமைந்தது.

இதுவரைகாலம் சிவசேனை வெளியிட்ட நூல்கள், தட்டிகள், சுவரொட்டிகள் யாவற்றையும் ஒவ்வொன்றாகக் காட்டிய மறவன்புலவு க.சச்சிதானந்தன் ஒவ்வொரு படியை எடுத்துச் செல்லுமாறு அவர்களுக்குக் கொடுத்தபோது அவற்றின் படங்கள் தம்மிடம் இருக்கின்றன எனத் தெரிவித்து எடுத்துச் செல்ல மறுத்துவிட்டனர்.

இதேவேளை, பசுவதைத்தடைச் சட்டக் கோரிக்கை தொடர்பாக இதுவரை சிவசேனை நடாத்திய போராட்டங்கள் யாவற்றையும் மேற்படி விசாரணையின் போது விளக்கமாகக் கேட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-26)

# தண்டவாள கிளிப்புகளை திருடினரென ஐவர் கைது

*ரயில் தடம் புரளும் நிலையும் ஏற்பட்டது*

யாழ்ப்பாணம், ஜூன் 18

நாவற்குழியில் தொடருந்து பாதையில் இருந்த தண்டவாள பொருத்துக் கிளிப்புகளை திருடியமை மற்றும் அவற்றை வாங்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், கடந்த 14ஆம் திகதி தண்டவாளப் பாதையில் உள்ள பொருத்துக் கிளிப்புகள் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார், திருடப்பட்ட ரயில் தண்டவாள கிளிப்புகளை கொள்வனவுசெய்து உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரைக் கைதுசெய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அரியாலையைச் சேர்ந்த 24 வயதுக்குட்பட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (த-26, 319)

# 65 மாணவர்களுக்கு கற்றல் நிதி உதவி

கொடிகாமம், ஜூன் 18

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் தெரிவுசெய்யப்பட்ட 65 மாணவர்களுக்கு கற்றல் நிதி உதவி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலையில் நடைபெற்றது. லண்டன் மற்றும் ஆஸ்ரேலியா பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தினரால் இந்த நிதியுதவி தொடர்ந்து மாணவர்களுக்கு கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது. (ஐ-159)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 18

நூலக நிறுவனத்தின் மலையக ஆவணகம் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இணையவழியில் நடைபெறவுள்ளது. நிகழ்வின் சிறப்பு பேச்சாளர்களாக மயில்வாகனம் திலகராஜ் "மலையக ஆவணமாக்கல் வடிவங்களும் அவசியமும்", சுப்பையா இராஜசேகர் " மலையக பாரம்பரியங்களை ஆவணப்படுத்தல்", பி.ஏ.காதர் "மலையக வரலாற்றை ஆவணப்படுத்துவதன் அரசியல் முக்கியத்துவம்" எனும் தலைப்புக்களில் உரையாற்றவுள்ளனர். (ஐ)

# எதிர்க்கட்சியின் பிரேரணை சிறுபிள்ளை எழுதிய கடிதம்

*கம்மன்பில திமிர்த்தனம்*

கொழும்பு, ஜூன் 18

ஐக்கிய மக்கள் சக்தியால் தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை 'குழந்தையின் கடிதம்' என விமர்சித்துள்ளார் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பை மையப்படுத்தி வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 10 விடயங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்நிலையில் நேற்று விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து உதய கம்மன்பில கருத்து வெளியிட்டார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு, 'குழந்தைகள் எழுதும் கடிதத்தில் பல பிழைகள் காணப்படும். அதுபோலவே எதிர்க்கட்சியால் எனக்கு எதிராக முன்வைத்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் பல பிழைகள் காணப்படுகின்றன. இலங்கையிலுள்ள பிரதான எதிர்க்கட்சியா இவ்வாறானதொரு பிரேரணையை முன்வைத்துள்ளது என்ற சந்தேகமும் எழுகின்றது.

நாம் எதிரணியில் இருக்கும்போது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ராஜித சேனாரத்ன மற்றும் ரிஷாட் பதியுதீன் ஆகியோருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை முன்வைத்துள்ளோம்.

எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை எவ்வாறு முன்வைக்க வேண்டும் என்பதை மேற்படி பிரேரணைகளை வாசித்து எதிர்க்கட்சி கற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அமைச்சர் இழைத்த குற்றம் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால் எனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள 10 விடயங்களில் எந்த இடத்திலும் குற்றம் என்னவென்பது குறிப்பிடப்படவில்லை. எனவே நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற போர்வையில் நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையையே ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளது.

எதிரணியின் அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படும் அரசியல் கைப்பாவைகள் எமது அரசுக்குள் இல்லை என நம்புகின்றோம்.

ஆனாலும் எதிரணியின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படும், எண்ணெய் நிறுவனத்தால் வழிநடத்தப்படும் எவரேனும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எமது அரசுக்குள் இருந்தால், அரசு அமைக்கப்பட்டு ஓராண்டுக்குள் அத்தகையவர்களை அடையாளம் காணக்கூடிய சூழல் உருவாகியுள்ளமை அரசுக்கான பொன்னான வாய்ப்பாகும்' என்றார். (ம-44)


## கேள்வி அறிவித்தல்
## சுத்திகரிப்பு சேவை – 2021/2022
## கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடக்கு மாகாணம்.
## NP/3/3/F5/CF/POCS/2021/32

1. தலைவர், மாகாண அமைச்சுப் பெறுகைக் குழுவினால் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ்வரும் அலுவலகங்களுக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்கு கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடமாகாணம் சார்பில் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   a) கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தில் நுழைவதற்கான தகுதியினை பெறுவதற்கு மற்றும் ஒப்பந்தம் உரியவாறு வலுவடைவதற்காக கேள்விதாரர் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   b) வடக்கு மாகாணத்தில் தனது பிராந்திய அலுவலகத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   c) வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கல்வி அமைச்சு அலுவலக நிதிக்கிளையில் பரிசீலிக்க முடியும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் 21.06.2021 ஆம் திகதி தொடக்கம் 11.07.2021 ஆம் திகதி வரை காலை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.3,500.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
8. கேள்வி ஆவணங்கள் 12.07.2021 ஆம் திகதி 15.00 மணிக்கு முன்பதாக கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கூறுவிலை திறத்தல் திகதியில் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையால் அரசாங்க அறிவித்தலின்படி அலுவலகம் மூடப்பட்டிருப்பின் அடுத்துவரும் அலுவலக நாளில் 15.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
9. சகல கேள்விகளுடனும் ரூபா.397,000.00 பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.

இ.இளங்கோவன்,
தலைவர்,
மாகாண அமைச்சு பெறுகைக் குழு(பெரியது)
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வட மாகாணம்,
செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 9259, 021 222 2283
தொலைநகல் இல: 021 222 2293

திகதி 18.06.2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
21
11
1937



உதிர்வு
19
05
2021

## அமரர் கதிரவேலு திருநாவுக்கரசு

**B.A(Hons), SLPS- 1**

(ஓய்வுநிலை அதிபர்)

எமது குடும்ப விளக்கு திருநாவுக்கரசு
தெள்ளிய சிந்தனையாளன்
கம்பீரமாக இவ்வுலகில் வாழ்ந்து
மெல்லத் தன் மேனிவிட்டு
விண்ணுலகம் புகுந்து
இன்றுடன் மாதம் ஒன்று
உருண்டோடியதோ!
மீளமுடியவில்லை - அப்பா
துன்பக் கடலிலிருந்து....

எமது குடும்பத் தலைவர் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவிகள் புரிந்தோர். இறுதி நிகழ்வில் பங்கெடுத்து ஆத்ம சாந்திபெறப் பிரார்த்தித்தவர்கள். கண்ணீர் அஞ்சலிகள். துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோர். மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர். அஞ்சலியுரை நிகழ்த்தியோர். சமூக வலைதளங்கள். மற்றும் தொலைபேசியூடாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்கள். இன்னும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மானிப்பாய் வடகிழக்கு,**
**மானிப்பாய்.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
25
10
1928



மறைவு
17
06
2021

## திரு. அம்பலவாணர் சண்முகம்

கரந்தன் நீர்வேலியை பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சண்முகம் அவர்கள் நேற்று (17.06.2021) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கனகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) வின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், இராசையா, நடராசா, அன்னம்மா, இராசம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், செல்லையா, தங்கம்மா மற்றும் பொன்னம்பலம், காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் மைத்துனரும், யோகராணி (கனடா), சோதிமலர், சாரதாதேவி (ஜேர்மன்), ஜானகி, கலைவாணி (கனடா), காலஞ்சென்ற ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பாலேந்திரா மற்றும் ஞானசேகரம், சிவநேசராசா, தருமலிங்கம், பரசுராமன் ஆகியோரின் மாமனாரும், கோகுலன்-நேருகா, பிரதீபராஜ், இந்துசன், சுபாங்கி, லக்சிகா, பதுமரதன், பதுமஜனனி, பதுமவளவன், நிராஜ், ஷயானி ஆகியோரின் பாசமிகு பேரனும், சபினேஸ், சபினாஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி பத்தகலட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 571 1160**

# கொரோனா 2,361

கொழும்பு, ஜூன் 18

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 361 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 33 ஆயிரத்து 53ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 835 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 434ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

# மணிவிழா வாழ்த்துக்கள்



இன்று மணிவிழாக் காணும்

## உயர்திரு. இராசையா பத்மநாதன்

பிரதிப் பிரதம செயலாளர் (நிதி)
வடக்கு மாகாணம்

அவர்களுக்கு மணிவிழா
வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன்
ஓய்வுக் காலம் உடல், உள
ஆரோக்கியத்துடன்
மகிழ்ச்சிகரமானதாக அமைய
இறை ஆசி
வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

மனமகிழ்ந்து வாழ்த்தும்
**மந்துவில் வாழ் மக்கள்.**
**மந்துவில், கொடிகாமம்.**

# மரண அறிவித்தல்

மலர்வு
28
09
1967



உதிர்வு
17
06
2021

## திரு.பாலசுப்பிரமணியம் ஞானேந்திரம்

**(முன்னாள் மருந்தாளர் - குகன் வைத்தியசாலை)**

பங்களா ஒழுங்கை, மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. பாலசுப்பிரமணியம் ஞானேந்திரம் அவர்கள் நேற்று (17.06.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் - தெய்வநாயகி (பாப்பா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான K.T.கந்தையா (சுதுமலை)- நல்லம்மா தம்பதியரினதும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மங்கையற்கரசி தம்பதியரினதும் அன்புப் பேரனும், குகேந்திரன் (ரஞ்சி- சுவிஸ்), தனேந்திரன் (பேபி - லண்டன்), நிரஞ்சினி (செல்லா - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுஜாதாதேவி (சுவிஸ்), லோகினி (லண்டன்), கணேசதாசன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ஆதிஸ், விஸ்வா, காவியா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், நிதர்சன், மகிமா ஆகியோரின் அன்பு மாமாவும், சுந்தரலிங்கம் (கனடா), காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சிவபாதம் (குகன் வைத்தியசாலை), தம்பாப்பிள்ளை (நமீபியா) ஆகியோரின் மருமகனும், கெங்காகுலதிலகம் (கனடா), குகதாஸ் (லண்டன்), காலஞ்சென்றவர்களான குமாரசாமி, கனகரத்தினம் ஆகியோரின் பெறாமகனும், சுகந்தினி (சாந்தா - சிங்கப்பூர்), மயூரன் (லண்டன்), சியாமளா (மாலா - கொழும்பு), யசோதினி (கொழும்பு), பிரசாந்தன் (கனடா), கீதா (லண்டன்), கோகுலன் (நமீபியா), நிராகுலன் (லண்டன்), சத்யாகுலன் (நமீபியா) ஆகியோரின் பாசமிகு மச்சானும், மைதிலி (கனடா), காண்டீபன் (கனடா), ஜனகன் (லண்டன்), ஆதவன் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் சுகாதார வழிமுறைகளுக்கமைய நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி, மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பங்களா ஒழுங்கை,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 08 . 1950



மறைவு
13 . 06 . 2021

## கலாநிதி தம்பிராஜா வசந்தகுமார்

**(முன்னாள் இலங்கை மின்சார சபை பொறியியளாளர்,
Former Director of Computek College-Canada)**

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் உரும்பிராய், கனடாவினை (Toronto) வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தம்பிராஜா வசந்தகுமார் அவர்கள் கடந்த (13.06.2021) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா மற்றும் யானகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி புனிதவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயக்குமாரியின் அன்புக் கணவரும், வைதேகி, சேரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாயிகிஷோர், சூ ஆன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆகான், வேதா ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், சிவநாதன், நிர்மலா, விஜயன், உதயன், கலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தகுமார், காலஞ்சென்ற புவனகுமார் மற்றும் மோகனகுமார், சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.06.2021) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு.**

**021 224 1390
077 881 2829**

**தகவல்:
மைத்துனர்கள்**

இரண்டு...
முடக்கப்பட்டுள்ள நிலையில், நாளை காலை விடுவிக்கப்படுகின்றது. இந்தத் தகவலை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் அரசடியில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிக்ளவில் அடையாளம் காணப்பட்டனர். அதனால் அரசடியில் வசியும் மக்களை சுயதனிமைப்படுத்தியதுடன், அந்தப் பகுதி கடந்த மே 28ஆம் திகதி முடக்கப்பட்டது. இந்த நிலையில் நாளை காலை முதல் அரசடிப் பகுதி விடுவிக்கப்படுகின்றது. அதேநேரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சாவற்காடு கிராமம் முடக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-26)

---

கோப்பாய் பொலிஸாருக்கு

## கையூட்டு பெற்றமைக்காக தண்டனை இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஜுன் 18

பயணத்தடை காலப்பகுதியில் அனுமதிபெற்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்களில் கையூட்டுப் பெற்ற கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸ் அலுவலகர் உட்பட இருவருக்கு தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பதவி நிலை பொலிஸ் அலுவலகருக்கு நெடுந்தீவு பொலிஸ் பிரிவுக்கும் அவரின் கீழ் பணியாற்றிய தமிழ் பொலிஸ் உத்தியோகத்தருக்கு காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் பிரிவுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் பயணத்தடைக் காலப்பகுதியில் அனுமதிபெற்று வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தகர்களிடம் 10 ஆயிரம் ரூபா வரை கையூட்டு பெற்றமைதொடர்பில்முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள்ளன. அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணையை அடுத்து இருவருக்கும் தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, மீன் வியாபாரியிடம் கையூட்டுப் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீதும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
02 - 04 - 1938



மறைவு
19 - 05 - 2021

அமரர்

## திருவாளர் நாகலிங்கம் குலநாயகம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய எமது குடும்பத் தலைவர் அமரர் திருவாளர் நாகலிங்கம் குலநாயகம் அவர்களின் மறைவையொட்டி 31ம் நாள் நினைவஞ்சலியின் மூலம் அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இணுவையூர் செகராச சேகரப்பிள்ளை யாரை வேண்டுவதுடன் அவர்களின் மறைவுச் செய்தி கேள்வியுற்று நேரிலும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்ட உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்மகிழ
24 . 10 . 1951



கண்நெகிழ
19 . 05 . 2021

## திருமதி ஜெயலஷ்மி குகபாஸ்கரன்

**கடந்த (19.05.2021) அன்று இறைபதம் அடைந்த என் அன்புத் துணைவியின் மரணச் செய்தி அறிந்து ஓடோடி வந்து அன்னாரின் இறுதிக் கிரியைகளுக்கான உதவிகளைச் செய்த உற்றார், உறவினர், அயலவர்கள், வங்கி ஊழியர்கள், நண்பர்கள் அனைவருக்கும், மலர் வளையங்கள் வைத்தும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் என் இதயபூர்வமான நன்றிகளை அன்புடன் தெரிவிக்கின்றேன்.**

ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!

தகவல்:
071 8474592

சண்முகம் குகபாஸ்கரன் – கணவர்,
[ஓய்வுநிலை இலங்கை வங்கி உத்தியோகத்தர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின்...

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றியவர்களுக்கு இரண்டாவது டோஸ் ஏற்றப்படும்போது ஏனைய 4 மாவட்டங்களுக்கும் முதலாம் கட்டத் தடுப்பூசிகள் வழங்கக்கூடியதாக இருக்கும் என்று ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், இலங்கையிலுள்ள 9 மாகாணங்களின் சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

**அரசியல் தலையீடு**

தென்னிலங்கையைச் சேர்ந்த சுகாதாரப் பணிப்பாளர்கள் கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையில் அதிகரித்த அரசியல் தலையீடு காணப்படுகின்றது என இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும், தடுப்பூசி ஏற்றலுக்கான முன்னுரிமையை அடிக்கடி மாற்றவேண்டாம் என்றும் கோரியுள்ளனர்.

**வடக்கு நிலவரம்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றல் விரைவாக நடைபெற்று முடிந்ததை ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். இதன்போது வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களுக்கும் தடுப்பூசி இன்னமும் ஏற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபச்ச, ஏற்கனவே இலங்கைக்கு கிடைத்துள்ள ஒரு மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசியில் இரண்டாவது டோஸ் இந்த மாத இறுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்றப்படவுள்ளது. இதன்போது வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களுக்கும் முதலாவது டோஸை வழங்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

**பதிவுகள் அவசியம்**

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி கோத்தாபய இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார். கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படும்போது அது தொடர்பான பதிவுகள் முக்கியம் என்று குறிப்பிட்டுள்ளார். இரண்டு டோஸும் ஏற்றியவர்களுக்கு விசேட சான்றிதழ் அச்சிட்டு வழங்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார். (மஒ.5)

## பயணக் கட்டுப்பாட்டை....

பதி தலைமையில் இன்று நடைபெறவுள்ள கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும். இவ்வாறு கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கடந்த மே 21ஆம் திகதி நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாட்டை ஜூன் 21ஆம் திகதி அதிகாலை 4 மணியுடன் தளர்த்துவதற்குக் கடந்த வாரத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இந்நிலையில், இந்திய திரிபு வைரஸுடன் சமூகத்தில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை மற்றும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் பயணக் கட்டுப்பாட்டை இப்போதைக்குத் தளர்த்த வேண்டாம் என்று விசேட மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும், இது குறித்து இதுவரையில் முடிவெடுக்கவில்லை என்றும், நாட்டின் கொவிட் தொற்றுப் பரவல் நிலைமை குறித்து மீளாய்வு செய்த பின்னரே முடிவெடுக்கப்படும் என்றும், இதன்படி இன்று கூடும் கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார். (மஒ.5,22)

## டெல்டா...

ஒவ்வாமைப் பிரிவின் பிரதானி மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில்,

இந்தியாவில் மிகவேகமாகப் பரவிவரும் வீரியம் கொண்ட டெல்டா (பி.1.617.2) என்ற திரிபுடைய வைரஸுடன் கொழும்பு, தெமட்டகொடப் பிரதேசத்தில் ஐந்து பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த முறை அடையாளம் காணப்பட்ட பி-117 வைரஸ் பிரிவை விடவும், தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள பி1.617.2 என்ற வைரஸ் 50 வீதம் வீரியம் கொண்டது. கொரோனாத் தடுப்பூசியின் ஒரு டோஸைப் பெற்றுக் கொண்டவர்களுக்கும் இந்த வைரஸ் பரவும் அபாயம் உள்ளது என்று பதிவிட்டுள்ளார்.

எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலேயே குறித்த ஐவரும் சமூகத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வைரஸுடன் தொற்றாளர்கள் சமூகத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதற்கு முன்னதாக டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்ட இருவர் கொரோனா இடைத்தங்கல் நிலையங்களிலிருந்து அடையாளம் காணப்பட்டிருந்தனர். அதேவேளை பிரிட்டனில் பரவும் அல்பா வைரஸுடன் 8 பேர் காலி, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் கண்டறியப்பட்டுள்ளனர். (ம-ஒ.5,4)

## தவறி....

நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அச்சுவேலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டைச் சேர்ந்த நவரத்தினம் அன்ரன் ஜெயராஜா (வயது-36) என்ற குடும்பத் தலைவரே உயிரிழந்தார்.

கட்டடத்தின் மேல் தளத்தில் தூண் அமைக்கும்பொழுது தவறி கீழே வீழ்ந்தே அவர் உயிரிழந்தார். இந்த நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் அவரது சடலம் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் மின் தகனம் செய்யப்படவுள்ளது. (ம-26)


## சேவை நலன் பாராட்டு

யாழ் போதனா வைத்தியசாலையில் 32 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும், விடுதிப் பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராகவும் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

**திரு.செல்வரத்தினம் தவச்செல்வம்**



அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துக்கள்

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## கேள்வி அறிவித்தல்

**பாதுகாப்பு சேவை – 2021/2022**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**
**வடக்கு மாகாணம்.**
**NP/3/3/F5/CF/POSS/2021/33**

1. தலைவர், மாகாண அமைச்சுப் பெறுகைக் குழுவினால் கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ்வரும் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கு கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடமாகாணம் சார்பில் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   a) கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   b) அத்துடன் பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தில் நுழைவதற்கான தகுதியினை பெறுவதற்கு மற்றும் ஒப்பந்தம் உரியவாறு வலுவடைவதற்காக கேள்விதாரர் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   c) வடக்கு மாகாணத்தில் தனது பிராந்திய அலுவலகத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   d) வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடமாகாணம், செம்மணி வீதி, எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கல்வி அமைச்சு அலுவலக நிதிக்கிளையில் பரிசீலிக்க முடியும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் 21.06.2021 ஆம் திகதி தொடக்கம் 11.07.2021 ஆம் திகதி வரை காலை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.3,500.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
8. கேள்வி ஆவணங்கள் 12.07.2021 ஆம் திகதி 15.00 மணிக்கு முன்பதாக கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கூறுவிலை திறத்தல் திகதியில் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையால் அரசாங்க அறிவித்தலின்படி அலுவலகம் மூடப்பட்டிருப்பின் அடுத்துவரும் அலுவலக நாளில் 15.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
9. சகல கேள்விகளுடனும் ரூபா.199,000.00 பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.

**இ.இளங்கோவன்,**
**தலைவர்,**
**மாகாண அமைச்சு பெறுகைக்குழு (பெரியது)**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம்,**
**செம்மணி வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல. 021 221 9259, 021 222 2283**
**தொலைநகல் இல. 021 222 2293**

**திகதி 18.06.2021**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள்...

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் நேரில் வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தடைப்பட்டுள்ள இந்திய அபிவிருத்தித் திட்டங்களை மீளவும் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும் இடையில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே மேற்படி விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

சந்திப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில், கொரோனாத் தொற்றுக்கு முன்னர் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய அரசால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய நாம், அதனை இந்தியா மீண்டும் முன்னெடுக்க வேண்டும் எனக் கோரினோம்.

அத்துடன் முக்கியமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழ் மக்களின் தாயகமாக உறுதிசெய்வதற்கு இந்தியா செயற்பட வேண்டும். இந்த மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு நியாயமானதும் கௌரவமானதுமான அரசியல் தீர்வை இந்தியா பெற்றுக்கொடுக்க வேண்டும். தமிழ் மக்கள் சுயமரியாதை கௌரவம், நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றுடன் வாழ்வதற்கான வழிவகைகளை இந்தியா ஏற்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினோம். தமிழ் மக்கள் நீண்டகாலப் போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். அவர்களுக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும், அவர்கள் மீள் குடியேற்றப்பட வேண்டும், அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும், இதற்கான நகர்வுகளை இந்தியா முன்னெடுக்க வேண்டும் எனக் கோரினோம்- என்றார்.

இந்தச் சந்திப்பில் பருத்தித்துறை துறைமுகத்தை இந்தியா அபிவிருத்தி செய்யும் என்ற விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பலாலி விமான நிலையத்தை மீளச் செயற்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறும் கூட்டமைப்பு கோரியுள்ளது. (மஒ,5,22)

## சீனாவை....

தேசியக் கூட்டமைப்பினர் இந்தியத் தூதுவருக்கு சுட்டிக்காட்டியபோது, அவர்களைக் கையாள்வது எப்படி என எங்களுக்குத் தெரியும் என்று இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே பதிலளித்துள்ளார்.

கீரிமலையில் தனியார் காணிகளைக் கையகப்படுத்தி மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது அமைக்கப்பட்ட கீரிமலை மாளிகை தொடர்பான ஆவணங்களை தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, இந்தியத் தூதுவரிடம் கையளித்தார்.

இதனோடு இணைந்ததாக இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துச் செல்வது, இந்தியாவின் பாதுகாப்புக்கு குறிப்பாக தமிழகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்கள் உள்ளிட்டவற்றை விலாவாரியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விளக்கிக் கூறியுள்ளனர். இதன்போது ஒரு கட்டத்தில் இந்தியத் தூதுவர், அவர்களைக் கையாள்வது எப்படி என எங்களுக்குத் தெரியும் என்று பதிலளித்தார். இதன் பின்னர் அந்த விடயம் பேசப்படவில்லை. (ம-ஒ,5,22)

## நடைமுறை....

மானதோ அதைப் பற்றிப் பேசுவோம் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார். அத்துடன் மாகாணசபை முறைமையையும் கைவிட்டுவிட வேண்டாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பகல் 11 மணியிலிருந்து 12.45 மணி வரை கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கூட்டமைப்பின் அழுத்தங்கள் போதாது என்பதை இந்தியத் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை இந்தியா பிரயோகிக்கின்றது என்றும், கூட்டமைப்பும் அதிகபடியான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபை முறைமையையும் கைநழுவ விடவேண்டாம் என்பதையும் அவர் இங்கு இராஜதந்திர மொழியில் சுட்டிக்காட்டினார் என கூட்டத்தில் கலந்துகொண்ட கூட்டமைப்புப் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார்.

மேலும் மாகாணத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசாங்கம், தேசிய பாடசாலைகளாகத் தரம் உயர்த்தல் மற்றும் மாவட்ட பொது மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தல் என்ற அடிப்படையில் மீளப்பெற்றுக் கொள்வது தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அதிகாரங்கள் மீளப்பெறப்படுவது தொடர்பில் இந்தியாவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் என்றும், கூட்டமைப்பும் அதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் தூதுவர் இந்தச் சந்திப்பில் கேட்டுக் கொண்டார்.

**ஊடக அறிக்கை**

இதேவேளை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில், கொரோனாத் தொற்றுக்கு பின்னரான காலப்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் அபிவிருத்தி ஆகிய விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் உட்பட அனைத்து இலங்கையர்களும் சமாதானத்தின் நலன்களை அனுபவிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் வீடமைப்புத் திட்டம் போன்ற திட்டங்களால் சமூக உட்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதலை நோக்கி நிலையான பங்களிப்பை இந்தியா வழங்கி வருவதை தூதுவர் எடுத்துரைத்திருந்தார்.

அத்துடன் தொடர்பாடல், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காகவும் இந்தியா தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கும் என்றும் தூதுவர் இந்தச் சந்திப்பில் உறுதியளித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களின் அபிவிருத்திக்கான அபிலாசைகள் மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்த பல்வேறு நோக்குகள் தொடர்பாகவும் இரு தரப்பினரும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடினர்.

இலங்கையின் அரசமைப்பு மற்றும் ஆட்சியமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியான மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான தற்போதைய நிலை குறித்துதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவினர் தூதுவருக்குத் தெரிவித்திருந்தனர்.

சமத்துவம், சமாதானம், நீதி மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு அமைவாகவும் வலுவான இலங்கையை உருவாக்கவும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் என்ற அடிப்படையில் ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அதிகாரங்களைப் பகிர்வதற்கான இந்தியாவின் ஆதரவையும் தூதுவர் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியிருந்தார் என்றுள்ளது. (ம-ஒ,5,22)

## பயணக்...

யுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெரியமடு, சன்னார் மற்றும் ஈச்சளவக்கை போன்ற பகுதிகளில் காணப்படுகின்ற எமது பலநூறு ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் கபளீகரம் செய்து வேலி அடைத்து வருகின்றனர்.

இராணுவத்தினர் வேலி அடைத்து வரும் குறித்த காணிகளுக்குள் எமது மயானங்கள், கால்நடை மேய்ச்சல் நிலங்கள், குளங்கள், சிறுவர் பூங்கா, கடைத் தொகுதிகள் மற்றும் பழைய கட்டடங்கள் போன்றவை உள்ளன. கொரோனா பயணத்தடையைப் பயன்படுத்தி இவ்வாறான செயற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர் எனவே மக்கள் பிரதிநிதிகள் இது தொடர்பில் கூடிய கவனமெடுத்து எமது காணிகளை எமக்கு மீட்டுத் தரவேண்டும் - என்றனர். (ப-213)

## பஸில்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தூதுவருடான சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் பிரதிநிதி ஒருவர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பசில் ராஜபக்சவையும் வைத்துக்கொண்டு எங்களுடன் பேச்சு நடத்த விரும்புகின்றார் என்று தெரியவருகின்றது. அதனாலேயே அவருடனான சந்திப்பை இறுதி நேரத்தில் ஒத்திவைத்துள்ளார். பஸில் ராஜபக்ச வந்ததும் மீண்டும் பேச்சு நடக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தை இந்தியத் தூதுவர் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கொரோனாத் தடுப்பூசிகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தடுப்பூசிகள் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 50 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளனவே என்று குறிப்பிட்டுள்ளார். அது போதாது என்று குறிப்பிட்ட கூட்டமைப்பினர் அதிகளவான தடுப்பூசிகள் தேவை என்று வலியுறுத்தினர்.

இதன்போது இந்தியத் தூதுவர், தமது நாட்டில் தடுப்பூசியின் தேவை அதிகரித்துள்ளது. ஆனால் உற்பத்தி குறைவாக உள்ளது.

அதனால் இப்போது தடுப்பூசிகளை வழங்க முடியாத சூழல் காணப்படுகின்றது என குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரச்சினைகள் தீர்ந்த பின்னர் இலங்கைக்கு மாத்திரமல்ல ஏனைய நாடுகளுக்கும் தடுப்பூசிகளை வழங்குவோம் என்று கூறியுள்ளார். (ம-ஒ,5)

## யாழ்ப்பாணத்தில்...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 10 மாதக் குழந்தையும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கொரோனா இடைத்தங்கல் விடுதியில் சேர்க்கப்பட்ட 10 நாள் குழந்தையும் உள்ளடக்கம்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு 310 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது 23 பேருக்கும், நேற்றுப் பகல் 599 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது 44 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் 118 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது 18 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் 11 பேருக்கும், கரவெட்டி, நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா 10 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணம் சிறைச்சாலை ஆகியவற்றில் தலா 8 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் 2 பேருக்கும் என 64 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 2 பேருக்கும், வவுனியா தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

## கொரோனாவால்...

போதனா மருத்தவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

அவர் கிட்னி பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 64ஆக உயர்வடைந்துள்ளது. (ம-ஒ.526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பெல்ஜியம் அதிரடியாட்டம் டென்மார்க்கை வீழ்த்தியது!

**ஊரோம், ஜூன் 18**

**யூரோ கிண்ணத் தொடரில் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற ஆட்டத்தில் பெல்ஜியம் அணி போராடி வெற்றிபெற்றது.**

இந்த ஆட்டத்தில் பெல்ஜியத்தை எதிர்த்து டென்மார்க் மோதியது. ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்திலேயே யொசொப் பவுல்சன் டென்மார்க்கின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார்.

இதையடுத்;து ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்த டென்மார்க் முதல் பாதியின் முடிவு வரை தன் ஆதிக்கத்தை நிலைப்படுத்தியது. இரண்டாவது பாதியில் பெல்ஜியத்தின் வீரரான ஹசாட் 54ஆவது நிமிடத்தில் கோலைப் பதிவுசெய்து கோல் கணக்கை சமன்செய்தார். அதன் பின்னர் கெவின் 70ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் பெல்ஜியம் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது. (ம)

A/L EXPRESS
வீடு வந்து கற்பித்தல் / Home
English / Tamil மொழி
CHEMISTRY இரசாயனம் Singam Master 076 056 5786
BIOLOGY உயிரியல் நரேன் மாஸ்டர் 077 665 5290

தேவை
K.K.S. வீதியில் அமைந்துள்ள பிரபல மருந்தகத்திற்கு External Pharmacist (Registed Pharmacist with Licence) மருந்தாளர் அவசரமாக தேவை.
தொடர்பு இல. 076 7028 830



# 5 பந்துவீச்சாளர்களுடன் இந்திய அணி அறிவிப்பு

சவுத்தாம்டன், ஜூன் 18

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதியாட்டத்துக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக 4 பந்துவீச்சாளர்கள் என்ற பொறிமுறையை அதிகம் நம்பிக் களமிறங்கும் கோலி, இறுதியாட்டத்தில் 5 பந்துவீச்சாளர்களுடன் களமிறங்கவுள்ளார். இதன்படி அறிவிக்கப்பட்ட இந்திய அணி, கோலி (தலைவர்), ரகானே (துணைத்தலைவர்), ரோகித், கில், புஜாரா, பன்ட், ஜடேயா, அஸ்வின், சமி, இசாந் சர்மா, பும்ரா என்பதாக அமைந்துள்ளது. (ம)

# உக்ரைன் உக்கிர ஆட்டம் மசிடோனியாவை வென்றது!

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் வடக்கு மசிடோனியை வென்றது உக்ரைன்.

ஆட்டத்தின் 29ஆவது நிமிடத்தில் யாமெலென்கோ உக்ரைனின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அடுத்த ஐந்தே நிமிடத்தில் உக்ரைனின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார் றோமன். முதல் பாதியின் முடிவில் உக்ரைன் 2:0 என்று பெரும் ஆதிக்கம் செலுத்தியது.

இரண்டாவது பாதியில் வடக்கு மசிடோனியா ஒரு கோலைப் பதிவுசெய்தது. எனினும் சமன்செய்யவோ ஆதிக்கம் செலுத்தவோ அந்த அணியால் முடியவில்லை. முடிவில் 2:1 என்று வென்றது உக்ரைன். (ம)

# சுவிஸை வீழ்த்தி இத்தாலி அபாரம்

உரோம், ஜூன் 18

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தை அபாரமாக வீழ்த்தியது இத்தாலி.

ஆட்டத்தின் 26ஆவது நிமிடத்திலேயே மனுவல் இத்தாலியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். இத்தாலியின் ஆதிக்கத்துடன் முதல்பாதி முடிந்தது.

இரண்டாவது பாதியின் 52ஆவது நிமிடத்தில் மனுவல் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து இத்தாலி 2:0 என்ற கோல் கணக்கில் பெரும் ஆதிக்கம் செலுத்தியது.

89ஆவது நிமிடத்தில் கிரோ இம்பொபில் இத்தாலியின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்ய சுவிட்சர்லாந்துக்கு சிறு வாய்ப்பையும் வழங்காமல் வெற்றிபெற்றது இத்தாலி. (ம)





# துருக்கிக்கு வேல்ஸ் அதிர்ச்சி வைத்தியம்

உரோம், ஜூன் 18

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் துருக்கியை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது வேல்ஸ்.

ஆட்டத்தின் முதல் 40 நிமிடங்கள் வரையில் இரண்டு அணிகளும் சிறப்பான போராட்டத்தை வெளிப்படுத்தின. 42ஆவது நிமிடத்தில் ஆரோன் வேல்ஸ் அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்ய அந்த அணி முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் வேல்ஸின் ஆதிக்கம் நீடித்தது. மேலதிக நிமிடத்தில் வேல்ஸ் அணித்தலைவர் கரீத் பேல் அற்புதமான பரிமாற்றமொன்றை வழங்க றொபேட்ஸ் அதைக் கோலாக மாற்றினார். இதையடுத்து முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது வேல்ஸ். (ம)

செய்தி : news@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 18.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org